உ

சிவமயம்

ஓம் வீராட் விஸ்வப் பிரமனே நமக





# பஞ்ச தீபம்



யாழ்ப்பாணம் - அரியாலையூர்

அமரர்

## தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கம்

மூத்த துணைப் பொதுச் செயலாளர் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

உதவிக்கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி) - யாழ் கல்விவலயம்

அவர்களின்

# நினைவு மலர்

27.04.2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சமர்ப்பணம்

38 ஆண்டுகள் ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டு
பல்வேறு மாணவர்களை
அறிஞர்களாக,
மேதாவிகளாக,
கலைஞர்களாக உருவாக்கியது மட்டுமல்லாது,
ஒரு சமூகத் தொண்டனாக, ஆசிரியராக, அதிபராக,
சமூகத் தலைவனாக, புகழ்பெற்ற நடிகனாக, கலைஞனாக,
தந்தையாக, நல்ல நண்பனாக, சகல சௌபாக்கியங்களும்
நிறைந்த மனிதராக வாழ்ந்ததோடு
தனது மூன்று புதல்வர்களையும் சிறந்த கல்விமான்களாக உருவாக்க
வேண்டும் என்ற எண்ணத்துடன்
இறுதி மூச்சு வரையும் அயராது உழைத்தவர்.
உதவிக்கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி),
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின்
சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் ஆகிய
பதவிகளை வகித்த அமரர் தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கம்
ஞாபகார்த்தமாக வெளிவரும்
**'பஞ்ச தீபம்'**
எனும் இம்மலரை
அரியாலையூர் அருள்மிகு குலதெய்வமாகிய
ஞான வைரவப் பெருமானின்
பாதார விந்தங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

27.04.2008 குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

"ஓம் விராட் விஸ்வப் பிரம்மனேய நமக"



அரியாலையூர்

# அமரர் தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கம்

-மூத்த துணைப் பொதுச் செயலாளர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், உதவிக் கல்விப் பணிப்பாளர் யாழ் கல்வி வலயம் -

அவர்களின்

ஞாபகார்த்தமாக வெளியிடப்பெற்ற

## 'பஞ்ச தீபம்'

**27.04.2008**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

ஓம் வீராட் விஸ்வப் பிரமனே நமக



பிறப்பு
07.05.1950

இறப்பு
03.04.2008

அமரர்

# தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கம்

மூத்த துணைப் பொதுச் செயலாளர் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்
உதவிக்கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி) - யாழ் கல்விவலயம்

## திதி வெண்பா

பார்புகழ் சர்வசித்தின் பெருமாதம் பங்குனியில்
நேர்நிறை அபரபக்க நற்துவாதசியில் - பேர்புகழ்
தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கம் தரணிசேர் வாழ்வு நீங்கி
அம்பிகைபாகன் தாள்சேர்ந்தார் என்றறி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# திருமுறைகள்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் வணக்கம்

திருவும் கல்வியும் சீருந்தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகு மாளத்துப் பிள்ளையைப் பேணுவோம்.

திருவாக்கும் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமு கத்தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை.

## தேவாரம்

தம்மையே புகழ்ந் திச்சை பேசினுஞ்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்!
இம்மையே தருஞ் சோறுங் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையே சிவலோக மாள்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்து
        எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
        நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்து தேய்ந் தொன்றாந்
        திருப்பெருந் துறையுறை சிவனே!
ஒன்று நீ அல்லை; அன்றியொன் றில்லை;
        யாருன்னை அறியகிற் பாரே !

## திருவிசைப்பா

அன்ன நடையார் அமுத மொழியார்
        அவர்கள் பயில்தில்லைத்
தென்னன் தமிழும் இசையும் கலந்த
        சிற்றம்பலம் தன்னுள்
பொன்னும் மணியும் நிரந்த தலத்துப்
        புலித்தோல் பியற்கு இட்டு
மின்னின் இடையாள் உமையாள் காண
        விகிர்தன் ஆடுமே.

## திருப்பல்லாண்டு

தாதையைத் தாள் அற வீசிய
        சண்டிக்குஇவ் வண்டத்தொடும் உடனே
பூதலத் தோரும் வணங்கப் பொற்
        கோயிலும் போனகமும் அருளிச்
சோதி மணி முடித் தாமமும்
        நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாத சுத்துக்குப் பரிசுவைத் தானுக்கே
        பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியபுராணம்

மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை யமுதுசெய் வித்தல்
கண்ணினாலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனின் உலகர்முன் வருகென உரைப்பார்.

## திருப்புகழ்

எதிரி லாத பக்தி தனை மேவி
இனிய தாள்நி னைப்பை இருபோதும்
இதய வாரி திக்கு உறவாகி
எனதுளேசி றக்க அருள்வாயே
கதிர் காம வெற்பில் லுறைவோனே
கனக மேரு ஒத்த புயவீரா
மதுர வாணி யுற்ற கழலோனே
வழுதி கூன்நிமிர்த்த பெருமானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அமரர்
## தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கம் அவர்களின்
# வாழ்க்கைப் பதிவு

பொன்னொளிர் பூமியென போற்றியே புகழும்
தண்ணளிர் வயல்களும் தகைமைசேர் மாந்தரும்
எண்ணிலா வளங்களும் ஏற்றமார் பயிர்களும்
விண்ணுயர் கோபுர வணக்கநற் தலங்களும்
கண்ணிலும் மேலான கல்விநற் கூடங்களும்
தன்னகத்தே கொண்ட தவமுயர் மண்ணாய்
தரணியில் மிளிர்வதே சீரரி யாலையூர்
இத்தனை சிறப்பும் இயைந்த நல்லூரில்
இனியநல் லாளராய் வாழ்ந்தே மறைந்த
காரை நகர்மண் பெற்ற அன்புயர்
பொன்னர் கதிராசி தம்பதி யவர்தம்
பொற்புயர் மகனாம் வல்லிபுர மென்பவரும்
பேறுயர் நல்லாள் லட்சுமி என்பவரும்
பெற்ற அன்புயர் தம்பிப் பிள்ளையும்
தவமுயர் தம்பிஐயா பூரணம் தம்பதியின்
தூயநல் மகளாம் மாரிமுத் தென்பவரும்
இணைந்த இல்லற வாழ்வின் பயனாய்
நயினை அம்மன் அருளினைப் பெற்று
ஆயி ரத்து தொள்ளா யிரத்து
ஐம்பதா மாண்டு வைகாசித் திங்கள்
எழிலுறும் ஏழாந் தேதி தன்னில்
முழுமதி யாகவே மண்ணிலே மலர்ந்தார்
இவரை சுற்றத்தார் ராசா என்பர்
முதல்மகன் பஞ்ச லிங்கம் என்பவர்
மண்ணிலே மலர்ந்த மதிநிறை யாளர்
மகிழ்நிறை பஞ்ச லிங்கம் என்பவர்
அறிவுயர் கல்வி தன்னை யாமுயர்
நற்பரி யோவான் கல்லூரி தன்னில்
கற்றே வாழ்வினில் களிப்பது அடைந்தார்
கல்வியில் வல்லவனாய் களிப்புடன் திகழ்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| கனிவுய | ராளர் | பஞ்சலிங்க | மென்பவர் |
| அறிவுயர் | ஆசிரிய | பணிதனில் | இணைந்து |
| அதிபராய் | அறிஞராய் | பிரதிக்கல்விப் | பணிப்பாளராய் |
| செயற்றிறன் | மிக்கநல் | தொழிற்சங்க | வாதியாய் |
| சிறப்புயர் | நற்சமூக | முன்னோடி | யாகவும் |
| பாரினில் | திகழ்ந்தே | பேறது | பெற்றார் |
| மண்ணிலே | மதிப்புமிகு | மனிதராய் | திகழ்ந்த |
| மதிநிறை | யாளர் | பஞ்ச | லிங்கம் |
| வறுத்தலை | விளான் | தெல்லிப் | பளையை |
| வதிவிட | மாகவே | கொண்டே | வாழ்ந்த |
| சீருயர் | செல்லத் | துரையென் | பவரும் |
| சிறப்புயர் | நல்லாள் | பாக்கிய | மென்பவரும் |
| பெற்ற | பேறுயர் | மகளே | யாகிய |
| கனிவுயர் | கமலா | தேவியென் | பவரை |
| இல்லறத் | துணையாய் | இனிதுட | னேற்றார் |
| நல்லறங் | காத்திடும் | இல்லற | வாழ்வினில் |
| நலமுடன் | திகழ்ந்த | நல்லுயர் | தம்பதியர் |
| கூடிய | இல்லற | வாழ்வின் | பயனாய் |
| கொழும்பு | பல்கலைக் | கழகந் | தன்னில் |
| ஊடக | வியற் | கற்கை | நெறியினை |
| கற்கும் | அன்புயர் | வரகுணன் | தன்னையும் |
| நற்பரி | யோவான் | கல்லூரியில் | கற்கும் |
| ஹரிகரன், | மதுரதன் | என்பவர் | களையும் |
| மக்களாய் | பெற்றே | மகிழ்வது | அடைந்தனர் |
| மண்ணின் | மீதினில் | மகிழ்வுடன் | வாழும் |
| மதிப்புயர் | நாகேஸ் | வரியென் | பவரும் |
| கொழும்பில் | வாழும் | பாலசுப்பிர | மணியமும் |
| நோர்வே | தன்னில் | வாழும் | அறிவுயர் |
| தியாக | லிங்கம் | எனுமுய | ராளரும் |
| அருகில் | வாழும் | அன்புய | ராளர்கள் |
| நற்சரஸ் | வதியும் | கோசலா | தேவியும் |
| நோர்வே | மண்ணில் | வாழும் | அன்புயர் |
| யோகா | தேவி | எனுமுய | ராளரும் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோர்வே தன்னில் வாழும் அறிவுயர்
சோதி லிங்கம் என்பவர் தானும்
கனடா தன்னில் களிப்புடன் வாழும்
கடைக் குட்டி நல்மகா லிங்கமும்
பேறுயர் பஞ்ச லிங்கம் என்பவரின்
கூடப் பிறந்த வர்களே ஆவர்.
நாகேஸ் வரியை திருமணம் புரிந்த
மாவிட்ட புரத்து மண்ணைச் சேர்ந்த
மதிநிறை பேரம் பலமென் பவரும்
பால சுப்பிர மணியந் தன்னை
இல்லறத் துணையாய் இனிதுட னேற்ற
சுழிபுர மண்ணின் யோகம்மா என்பவரும்
தியாக லிங்கம் என்பவரை மணந்த
அரியாலையைச் சேர்ந்த சந்திர வதியும்
சரஸ்வதி தன்னை திருமணம் செய்த
மண்ணக வாழ்வை விட்டுமே மறைந்த
நீர்வேலி மைந்தன் சீர்செல்வ ராசாவும்
கோசலா தேவி தன்னை மணந்த
சிறப்புயர் சிவபால சிங்கமென் பவரும்
யோகா தேவி என்பவரை மணந்த
தெல்லிப் பளையூர் நற்குண தாசனும்
சோதி லிங்கம் தன்னை மணந்த
சுழிபுர மண்ணின் தவமலர் என்பவரும்
நல்மகா லிங்கம் தன்னை மணந்த
ஏழாலை மண்ணின் புஸ்ப ராணியும்
காலஞ் சென்ற பஞ்ச லிங்கத்தின்
மதிநிறை மைத்துனர் மைத்துனி மார்களே.
பஞ்ச லிங்கம் அவர்தம் மனையாள்
கனிவுயர் கமலா தேவி தம்மின்
கூடப் பிறந்த சோதரர் களாகிய
விருப்புயர் விநாயக தாசென் பவரும்
சீருயர் செந்தில் நாதனென் பவரும்
கனடா தன்னில் வாழும் அறிவுயர்
சக்தி வேற்பிள்ளை எனுமுய ராளரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணமுயர் குணதாசன் என்பவர் தானும்
காலஞ் சென்ற பஞ்ச லிங்கத்தின்
மதிநிறை மைத்துனர் மார்களே ஆவர்
வல்லி புரமெனும் வனப்புய ராளரும்
சீருயர் லட்சுமி என்பவர் தானும்
பெற்ற பேறுயர் பிள்ளைக ளாகிய
நற்கலா பூசணம் கந்தையா என்பவரும்
சீர்கலா பூசணம் பரம சாமியும்
வல்லி புரமும் பாக்கிய மென்பவரும்
பெற்ற பேறுயர் மக்களே யாகிய
தவமுயர் தர்ம லிங்கமென் பவரும்
ஓய்வு பெற்ற நல்லா சிரியர்
நல்நட ராசா எனுமுய ராளரும்
காலஞ் சென்ற பஞ்ச லிங்கத்தின்
சீருயர் சிறிய தந்தை மார்களே.
வல்லி புரமும் பாக்கியம் என்பவரும்
பெற்ற பேறுயர் மகளே ஆகிய
அன்ன லட்சுமி எனுமுய ராளர்
காலஞ் சென்ற பஞ்ச லிங்கத்தின்
மதிநிறை மாமி யாகவே மிளிர்ந்தார்
பஞ்ச லிங்கம் அவர்தம் தாயார்
பேறுயர் மாரி முத்து அவர்தம்
கூடப் பிறந்த வர்களே ஆகிய
சீருயர் கந்தையா என்பவர் தானும்
காலஞ்சென்ற மயில்வா கனமென் பவரும்
காலஞ் சென்ற பஞ்ச லிங்கத்தின்
மதிநிறை மாமன் மார்களே ஆவர்
மாரி முத்துவின் சோதரிக ளாகிய
சீருயர் தங்கம் மாவென் பவரும்
காலஞ் சென்ற வள்ளியம் மையும்
குணமுயர் பஞ்ச லிங்கம் தம்மின்
கனிவுயர் சிறிய தாய்மார்களே ஆவர்
பாலசுப்பிர மணியமும் யோகம்மா என்பவரும்
பெற்ற பேறுயர் தர்சிகா என்பவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியாக லிங்கமும் சந்திர வதியும்
இணைந்தே பெற்ற நல்லுயர் நிரோசனும்
சோதி லிங்கமும் தவமலர் என்பவரும்
பெற்ற அன்புயர் கஜானனும் டிலக்ஷனும்
நல்மகா லிங்கமும் புஸ்ப ராணியும்
பெற்ற அன்புயர் பிரியந்தியும் கவினயனும்
காலஞ் சென்ற பஞ்ச லிங்கத்தின்
நற்பெறா மக்களாய் மண்ணிலே மிளிர்ந்தனர்
பேரம் பலமும் நாகேஸ் வரியும்
பெற்ற பேறுயர் மக்களே ஆகிய
றஜித்தா கபிலாஜினி தனுஜா துவாரகாவும்
செல்வ ராசாவும் சரஸ்வதி என்பவரும்
பெற்ற அன்புயர் மக்களே ஆகிய
சிவப்பிரியா மகிழாஜினி அகிலாஜினி யுடனே
ஜனகன் கௌசிகன் ஆகியோர் களும்
சிவபால சிங்கமும் கோசலா தேவியும்
பெற்ற பேறுயர் மக்களே யாகிய
ஜெயக்காந் சந்திரகாந் கௌசிகா தன்னுடன்
சிவரங்கன் கௌதமி ஆகியோர் களும்
நற்குண தாசனும் யோகா தேவியும்
பெற்ற மதிநிறை மக்களே யாகிய
கிருஷாந்தி பிரவீனா ஜீவிகா என்போரும்
காலஞ் சென்ற பஞ்ச லிங்கத்தின்
மதிநிறை நல்மரு மக்களே ஆவர்.
கமலா தேவியின் சோதரர் களாகிய
விநாயக தாசை மணமது புரிந்த
மாதகலை சேர்ந்த விஜய லட்சுமியும்
செந்தில் நாதனை துணைவனாய் ஏற்ற
நீர்வேலி மண்ணில் வாழும் அறிவுயர்
வசந்தா தேவி என்பவர் தானும்
சக்தி வேற்பிள்ளை தன்னை மணந்த
அரியாலை மண்ணின் யமுனா வதியும்
நற்குண தாசனை திருமணம் புரிந்த
மாவிட்ட புரத்தின் பத்மா வதியும்
காலஞ் சென்ற பஞ்ச லிங்கத்தின்
நல்லுயர் சகலி மார்களே ஆவர்
விநாயக தாசும் விஜயலட் சுமியும்
பெற்ற அன்புயர் நளாஜினி என்பவரும்
செந்தில் நாதனும் வசந்தா தேவியும்
பெற்ற பேறுயர் அகிலனென் பவரும்
சக்திவேல் பிள்ளையும் யமுனா வதியும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற அன்புயர் கிரிஷாந் கரிசாந்
ஜானுகா என்னும் நல்லுய ராளரும்
நற்குண தாசனும் பத்மா வதியும்
பெற்ற அன்புயர் மக்களே ஆகிய
சகானா சுஜீவன் கரிதா என்போரும்
காலஞ் சென்ற பஞ்ச லிங்கத்தின்
பேறுயர் நல்மரு மக்களே ஆவர்.
பேரம் பலமும் நாகேஸ் வரியும்
பெற்ற பேறுயர் ரஜித்தா என்பவரை
இல்லறத் துணையாய் இனிதுட னேற்ற
இலண்டனில் வாழும் தவராசா என்பவர்
காலஞ் சென்ற பஞ்ச லிங்கத்தின்
பேறுயர் நற்பெறா மகனே ஆவார்
நற்தவ ராசாவும் றஜித்தா என்பவரும்
பெற்ற அன்புயர் மக்களே ஆகிய
நந்தஹரி டினேஸ்ஹரி கிஷாந்ஹரி ஆகியோர்
காலஞ் சென்ற பஞ்ச லிங்கத்தின்
பேறுயர் பேர மக்களே ஆவர்.
நல்லதோர் சுற்றமுடனே நானிலந் தன்னில்
நலமுடன் வாழ்ந்த பஞ்ச லிங்கம்
நாடு போற்றும் உத்தம ராக
நிறைவுயர் வாழ்வு வாழ்ந்தே வந்தார்
மக்கள் மதிக்கும் மதிநிறை யாளனாய்
மாநிலம் மீதினில் வாழ்ந்த அன்பர்
எல்லோர் மனங்களும் ஏங்கியே தவித்திட
இப்புவி வாழ்வினை விட்டுமே யகன்றார்
சமூகத்தின் உயிர்நாடி ஆகவே மிளிர்ந்த
சீருயர் பஞ்ச லிங்கம் அவர்கள்
பாரின்கண் வாழ்வை துறந்துமே யிறைவன்
பாதக் கமலம் பற்றியே இணைந்தார்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர், யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை

**கவிதையாக்கம்:**
ஐயாத்துரை குமரதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரியாலை அபிவிருத்திச் சங்கத்தினால் ஏற்பாடு செய்த தரம் 10 –13 வரையான வகுப்புகளுக்கான புலமைப்பரிசில் திட்டத்தின் ஆரம்ப வைபவத்தில் அமரர் ஆற்றிய வாழ்வின் இறுதிப் பேச்சிலிருந்து.....

*யாழ் கல்வி வலயப் பணிப்பாளராக திருமதி அ. வேதநாயகம் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டது அரியாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு ஒரு ஊன்றுகோலாகும்.*

*ஏற்கனவே நாங்கள் ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் திட்டத்தை அமுல்ப்படுத்தியிருந்தோம். ஆனால் அது எம்மத்தியில் மனத்திருப்தியை ஏற்படுத்தவில்லை. ஆனால் இப்போது ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சை அவ்வளவு முக்கியத்துவ மானதல்ல எனும் கருத்து கல்வியலாளர்களினால் முன்வைக்கப் படுகின்றன. அதிலும் உண்மை இருக்கின்றது.*

*ஏனென்றால் அண்மையிலே நான் பல்கலைக்கழகத்தோடு கல்வி அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடியபோது இலங்கை முழுவதும் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்படும் மாணவர் களில் 2 % மானவர்களே புலமைப்பரிசிலில் சித்தியடைந்த வர்கள். ஏனைய சித்தியடையாத மாணவர்களே எதிர் காலத்தில் பொறியியலாளராக, மருத்துவராக, கல்வியியாளராக வருகின் றனர்.*

*ஆகவே 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையால் பெரிதும் பயனில்லை எனும் கருத்து நிலவி வருகின்றபோதும் நாங்கள் இத்திட்டத்தை கைவிடவில்லை. இதன் உந்து சக்தியாக கடந்த ஐந்து வருடங்களாக பல்வேறு கல்வியாளர்களைச் சந்தித்து கலந்துரையாடி இத்திட்டத்தை தற்போது செயற்படுத்தி யுள்ளோம்.*

*பத்தாம் ஆண்டிலிருந்து பல்கலைக்கழகம் வரை இத்திட்டம் மேற்கொள்ளப்படும். இந்நாட்டிலே அடுத்த வருடத்திலிருந்து சகல உத்தியோகமும் பட்டதாரியல்லாத ஒருவருக்குக் கிடைக்காது என்பது ஒரு யதார்த்தமான உண்மை. ஆகவே க.பொ.த.(சா/த), க.பொ.த. (உ/த) சித்தியடைந்து விட்டோம்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற சிந்தனையில்லாமல் எமது பிள்ளைகளை ஏதோவொரு துறையில் பட்டதாரியாக்கவேண்டிய தேவையுள்ளது, இத்தோடு கணணிக் கல்வி, தொழில்நுட்பக்கல்வி, ஆங்கிலக்கல்வி ஆகியவற்றைக் கற்கவேண்டிய சூழ்நிலை தற்போதுள்ளது.

இதன் காரணமாகத்தான் இத்திட்டத்தை நாங்கள் உருவாக்கியுள்ளோம். மாணவரும், பெற்றோரும் இத்திட்டத்திற்கு 100 % மான ஒத்துழைப்பை வழங்கவேண்டும். அவர்களும் நாங்களும் கல்விப்புலமும் இணைந்துதான் இத்திட்டத்தை வெற்றிகரமான திட்டமாக ஆக்கமுடியும். மாணவர்களே பல்கலைக்கழகம் புகவேண்டும் என்ற அதிக அவாவோடு நீங்கள் செயற்படவேண்டும்.

அரியாலை மக்களின் பெருமை கல்வியில் தான் இருக்கிறது. இன்று எங்கிருந்தாலும் அரியாலையைச் சேர்ந்த ஒருவர் ஒரு பெருந்துறையில் இருப்பார். மீண்டும் கல்வியை நீங்கள் மனதில் நிறுத்த வேண்டும். எத்தனை தடை வந்தாலும் கல்வியை சிந்தியுங்கள். ஒழுங்காகச் செயற்படுங்கள். உங்கள் பிள்ளைகள் ஏதோவொரு துறையில் பட்டதாரியாகி எங்கள் நாட்டிற்கும் , அரியாலை மண்ணிற்கும் பெருமை தேடித் தரவேண்டும் என்பதே எங்கள் எல்லோரதும் பெரும் விருப்பாக உள்ளது.

**இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
**நல்லாற்றில் நின்ற துணை.**

**தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு**
**ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது தந்தையார் எம்முடன் இருக்கின்றார்

எம்மைவிட்டுத் திடீரென்று மறைந்த எமது தந்தையார் சிறந்த கல்விமானாய், சமூகத் தொண்டனாய், கலைஞனாய், பேச்சாளனாய் இந் நாட்டில் தடம் பதித்து எமக்கு சிறந்த வழிகாட்டியாகவும் விளங்கியவர்.

எமது தந்தையார் எம்மைவிட்டுச் சென்றாலும், அவர் எம்முடனேயே வாழ்ந்து - எங்களுடைய செயற்பாட்டிற்கும் - வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்கின்றார் என்ற நினைப்புடனேயே நாம் வாழ்ந்து வருகின்றோம்.

"மரணம்" என்பது மனிதவாழ்க்கையில் நிச்சயம் வருவதுண்டு. ஆனால் இப்படி இடை நடுவில் எங்களை விட்டு மறைந்தமை எமக்கு ஆறாத - மாறாத கவலையாகும்.

எங்களின் தந்தையார் தான் வாழ்ந்த 57 வருட காலப் பகுதி வரை தனக்கு ஏற்பட்ட நோய்நொடிகளையும் - துன்பங்களையும் பாராது இந்த சமூகத்துக்காக உழைத்த உத்தம தெய்வமாகும். அத்துடன் இறுதி மூச்சுவரை நாங்கள் சிறந்த கல்விமான்களாக வரவேண்டும் என்பதற்காக அரும்பாடுபட்டவர்.

இறுதியாக, எமது 'தீபம்' அணைந்தமையை எம்மால் தாங்கமுடியவில்லையெனினும், அவர் விட்டுச்சென்ற வெற்றிடத்தை நாங்கள் நிரப்பி - அவரின் கனவுகளையும், எண்ணங்களையும், கொள்கைகளையும், இலட்சியங்களையும் நாங்கள் நிறைவேற்றுவோம்.

எங்களின் தெய்வம் எம்மைவிட்டு மறைந்தாலும் அவரின் நினைவுகளுடனும் - ஆசிகளுடனும் நாம் வாழ்ந்து வருகின்றோம்.

பிள்ளைகள்
வரதனன், ஹரிகரன், மதுரதன்

**மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை**
**என்னோற்றான் கொல்எனுஞ் சொல்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரரின் வாழ்வியல் தோற்றங்கள்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காவது

## அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாடு

யாழ்ப்பாணம், இலங்கை. 3 - 9 சனவரி 1974

# கலை விழா

1974 சனவரி 3-ம் நாள் தொடக்கம் 9-ம் நாள் வரை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டுக் கலை விழாவிற் கலந்து சிறப்பித்தமையைப் பாராட்டி இச்சான்றிதழை வழங்குகின்றோம்.

நிகழ்ச்சி :- நாடகம் "பரதன்"
[யாழ் அரியாலி சனசமூக நிலையம்]

பங்குபற்றியவர் :- திரு. த. பஞ்சலிங்கம் [இராமர்]

சு. வித்தியானந்தன்
தலைவர்

எக்ஸ். எஸ். தனிநாயகம்
செயலாளர்

வி. எஸ். துரைராஜா
தலைவர்
கலை [illegible] குழு

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம் - இலங்கைக் கிளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Education International
## Brussels, Belgium

## Certificate of Participation

*This is to certify that*

MR.T.PANCHALINGAM C.T.T.U

*participated in the*

EI/INTU JOINT LEADERSHIP SEMINAR FOR EI MEMBERS IN SRI LANKA

18 - 21 APRIL, 1995, COLOMBO

Chief Coordinator
EDUCATION INTERNATIONAL
ASIA AND PACIFIC REGION

Coordinator
Education International
Asia and Pacific Region

Date. 21.4.95

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MESSAGE FROM EDUCATION INTERNATIONAL

EI is saddened of the sudden death of Mr. Panchalingam, Senior Assistant General Secretary of Ceylon Tamil Teachers Union on 6th April, 2008.

Mr. Panchalingam was a passionate trade union leader and a friend of Education International.

Fred van Leeuwen, General Secretary of Education International and I still remember the excellent arrangements and plans he made when Fred van Leeuwen and I visited Jaffna to observe the devastation of the 2004 Tsunami and develop relief programmes.

I am sure the teachers of Sri Lanka and we in Education International mourn the loss of this outstanding teacher trade unionist who contributed a lot in defending Trade Union Rights and improving the Quality of Public Education in Sri Lanka.

Please convey the condolences of Mr. Fred van Leeuwen and the EI Board to the family of Mr. Panchalingam.

The Ceylon Tamil Teachers Union has lost a good trade union leader.

Aloysius Mathews

***Aloysius Mathews***
*Chief Coordinator*
*Education International*
*Asia Pacific*

*Date: 22nd April, 2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CONDELENCE MESSAGE

Dear family members, friends, brother and sisters,

We received the news about departure of our dear friend Bro. T. Panchalingam with deep regret. He lived all his life to defend trade union freedoms and cope with all kinds of violations courageously and expressing real union values. He stood always on the side of teachers in all crises that they have experienced.

Our association with him over the years helped FES to proliferate its trade union education activities in the jaffna peninsula, thus empowering thousands of struggling workers. His demise is a great loss to trade unions and particularly to the Tamil teachers of Sri Lanka and the CTTU.

Even with a stressful and tight schedule, he was always ready to provide support, insightful advice and encouragement to those who are in need. He also worked with strong moral principles and professionalism. We are going to miss him a lot.

May he rest in peace and the loving memory of him will inspire us in our future work!

***Joachim Schluetter***
*Resident Representative*
*FES Sri Lanka*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INTERNATIONAL LABOUR ORGANISATION

*This Certificate is Awarded to*

*Mr. T. Panchalingam*

*for successfully completing the Workers' Education Training of Trainers Workshop*

*on*

*Chemical Safety for Trade Union Representatives*

*from 16 - 18 November 1998 in Colombo, Sri Lanka*

**Mr D P A Naidu**
Senior Specialist on Workers' Activities
ILO-SAAT, New Delhi

**Ms Shizue Tomoda**
Director
ILO Colombo Office

**Mr. I. Fedotov**
Senior Specialist on
Occupational Safety & Health
ILO-SAAT, New Delhi

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CONDELENCE MESSAGE

Dear family members, friends, brother and sisters,

I am profoundly saddened at the sudden and untimely death of Bro.T.Panchalingam.

Bro . Panchalingam was truly one of those rare people who touched the lives of so many of us and many more he never met. I was devastated to hear the news and still cannot believe he has gone and that I will never be able to call him up for advice or support or simply to talk about the important things of our common goals.

He was a caring, compassionate, charming, principled, Personable, wise and diplomatic person I have met and managed to combine humour, wisdom and an unwavering commitment to human rights in all his work and words.

He was a strong pillar of strength to the CTTU and Tamil teachers of Sri Lanka. His sincere efforts and all endeavours certainly made CTTU a formidable and a representative organisation capable of serving the battered Tamil teachers of the country.

I will miss him dreadfully and my heart goes out to his family, the CTTU and friends whom I know he truly loved and regarded as the foundation of his life.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

He was not only a tremendous force for good for workers and ordinary people but a great individual to work with and a trusted friend.

I remember of this quote - "Death is not the greatest loss in life. The greatest loss is what dies inside us while we live" I think Bro.Pancha never lost what many of us all do - hope, spirit and integrity - may his memory help guide us all in life.

I extend my deepest sympathies to his family, the CTTU and friends who have lost such a dearly loved one.

***S. H. A. Mohamed***
*Programme Officer,*
*FES Sri Lanka*

*Education, c'est delivrance.*
Education is freedom.

- ANDRE GIDE, *Journal*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச ஆசிரிய சங்கம் சார்பில் 1992ம் ஆண்டு சர்வதேச நாடுகளில்
இடம்பெற்ற கருத்தரங்குகளில் அமரர் கலந்துகொண்டபோது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடர்நிறைந்த காலத்திலும் தொழிற்சங்க தொழிற்பாட்டுடன் ஈடுபட்டவர்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஒரு பலம் வாய்ந்த தொழிற்சங்கம் என்பது ஒருபுறம் இருக்க, தமிழ் பேசுவோரது உயிர் நாடியான கற்பித்தல் நடவடிக்கைகளோடு அதிக ஈடுபாடும், அக்கறையும் மிக்க ஆசிரிய சமூகத்தின் நலன்பேணும் அமைப்பாகும்.

ஆரம்பகாலம் முதல் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தோடு தன்னை இணைத்துக்கொண்ட அமரர் த. பஞ்சலிங்கம் இடர்நிறைந்த காலத்திலும், விசேடமாக வடபகுதியில் தொழிற்சங்க தொழிற்பாட்டுடன் இரண்டறக் கலந்து ஆசிரிய சமூகத்தின் உந்துசக்தியாக திகழ்ந்ததோடு கவிஞனாக, கலைஞனாக, நடிகனாக, கலை இலக்கியத்துறையில் பிரகாசித்தார்.

அத்துடன் கல்வித்துறையிலும் பிரகாசித்தார்.

அவரது திடீர் மறைவு ஏற்படுத்திய வெற்றிடம் எளிதாக யாராலும் நிரப்ப முடியாததொன்று. அவரை முன்மாதிரியாகக் கொண்டு ஏனைய ஆசிரியர்கள் பணியாற்ற வேண்டும். அதே வேளை அமரர் பஞ்சலிங்கத்தின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

உடுவை. S. தில்லைநடராஜா
மேலதிகச் செயலர்,
கல்வி அமைச்சு,
இசுறுபாய பத்திரமுல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் நிறைந்து நிற்பவர்

ஆசிரியர், அதிபர், கல்விநிர்வாகி (முன்பள்ளி), தொழிற்சங்க வாதி, சிவில் சமூக சேவையாளர், நடிகர் போன்ற பல நிலைகளில் சிறந்து விளங்கியவரும் நட்புக்கும், சகோதரத்துவத்திற்கும் இலக்கணமாகத் திகழ்ந்த பஞ்சலிங்கம் அவர்களின் மறைவு யாவருக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

அன்னார் பல சிறப்புப் பண்புகளைப் பெற்றிருந்தார். நல்லாசிரியராகப் பல பாடசாலைகளில் நீண்டகாலம் பணிபுரிந்த அவர் நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி, பின் கல்வி நிர்வாகத் துறையில் ஈடுபட்டார். தமிழ்ப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியிலும், தமிழாசிரியர்களின் நலன் களைக் காப்பதிலும் நீண்ட காலமாக அயராது உழைத்த ஒரு தொழிற்சங்கவாதி. இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் வளர்ச் சிக்கு அரும்பணியாற்றியுள்ளார்.

இவர் கல்வித்துறையில் மாத்திரமன்று கலை, பண்பாட்டுத் துறையிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். பல நாடகங்களில் நடித்து மக்கள் மனதைக் கவர்ந்தவர்.

அரியாலைக் கிராமத்தின் பல சமூக, சமய அமைப்புக்களில் நிர்வாக உறுப்பினராக இருந்து அவற்றின் செயற்பாட்டிற்கும், வளர்ச்சிக்கும் பெரும்பணி புரிந்தார்.

இவர் பிறர், துயர் துடைப்பதில் முன்நிற்பவர். அடக்கமும் அமைதியும் மிக்க இவர் கடும்சொல் பேசியறியார். எவருடனும் மதிப்பு, மரியாதையுடன் நடந்துகொள்வார்.

கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக என்னுடன் மிகவும் நெருங்கிப்பழகிவந்த பஞ்சலிங்கத்தின் மறைவு எனக்கு மிகவும் கவலை தருவதாக இருக்கின்றது.எப்பொழுது கல்வி அபிவிருத்தித் திட்டங்கள் பற்றியே என்னுடன் உரையாடுவார்.

திரு. பஞ்சலிங்கத்தை இழந்து துன்பத்தில் இருக்கும் அவர் குடும்பத்துக்கு இறைவன் அருள்புரியவேண்டும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை**
முன்னாள் துணைவேந்தர்,
யாழ்.பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பமுடியாத சம்பவம்

அமரர் த. பஞ்சலிங்கம் அவர்களின் திடீர் மரணச் செய்தியை தொலைபேசி வாயிலாகக் கேள்விப்பட்டு அதிர்ச்சியடைந்தேன். என்னால் நம்பவே முடியவில்லை.

அவரோ, உறவினரோ மற்றவர்களோ சற்றும் எதிர்பார்க் காமல் சடுதியாக நிகழ்ந்துவிட்டது.

கொழும்புக்கோ, வெளிநாட்டுக்கோ அவரைக் கொண்டு சென்று வைத்தியம் செய்திருக்கலாம். ஆனால் அவரின் விதி முந்திவிட்டது என்றே நான் கருதுகின்றேன்.

அரியாலையின் மிகவும் புகழ்பூத்த பிரமுகரும் அரியா லையின் பெருமைமிக்க மூத்த கலைஞர் வல்லிபுரத்தின் பேரனும் இரண்டு கலாபூசணங்களின் பெறாமகனும் ஆகிய அமரர் த. பஞ்சலிங்கம் அரியாலைக்குப் பெருமை தேடித்தந்த சிறந்த கலைஞராவார்.

சிறந்த கல்விமானாகிய இவர் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராக இருந்து ஆற்றிய சேவை மறக்க முடியாததாகும்.

எனது இளைய தலைமுறை நண்பரும் எனது உயர் வில் பெருமைகொண்ட பெருமகனை நான் இழந்து நிற் கின்றேன்.

யாழ்ப்பாண மக்கள் கொழும்பு போன்ற பகுதிகளுக்கு இடம்பெயர்வதும் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்வதும் இடம்பெற்று வரும் இக் காலகட்டத்தில் எம்மூர் மக்களுக்கும் யாழ்ப்பாண வாசிகட்கும் தன்னலமற்ற சேவையாற்றிய சேவை யாளரை இழந்தது மனத்துக்குப் பெரும் கவலையை அளிக் கின்றது.

இவரின் இழப்பு இவரின் குடும்பத்துக்கு மாத்திரம் அல்ல உறவினருக்கும், அரியாலை மக்களுக்கும், கல்வி நிறுவனத் துக்கும், ஆசிரியசமூகத்துக்கும் ஈடுசெய்ய முடியாத இழப் பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின் குடும்ப சமூக கட்டமைப்பின் மூத்த பரம்பரையினரின் மறைவுக்குப் பின் தலைமைப் பொறுப்பில் இருந்த மூத்த தலைவனாக விளங்கிய இவரின் இழப்பு பெரிய வெற்றிடத்தை தோற்றுவித்து விட்டது.

இது பெரும் வேதனையாக அமைந்துவிட்டது.

அமரர் த. பஞ்சலிங்கம் அவர்கள் எப்போதும் சிரித்த முகத்துடன் கலகலப்பாக அளவளாவிக் கொண்டு மற்றவர்களுக்கு நல்ல ஒத்தாசை வழங்கி எடுத்த காரியத்தை சிறப்பாக நடாத்தி முடிப்பதில் தீரராக விளங்கினார்.

மற்றவர்களுக்காக பாடுபட்டு உழைக்கும் தன்மையுள்ள இவர் பெரியோர்களுக்கு எப்போதும் மதிப்பளிப்பவராக விளங்கினார். மிகவும் துடியாட்டமுள்ளவர்.

விசுவாசமுள்ளவர்.

நற்பண்பாளர்.

எளிமையானவர்.

சமூக சேவையாளர் ஆகிய இவர் அன்புடனும் பண்புடனும் எல்லோருடனும் பழகும் இயல்பு படைத்த பெருந்தகையாவார்.

அரியாலையில் உள்ள பாடசாலைகள், ஆலயங்கள், சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள் குறிப்பாக அரியாலை அபிவிருத்திச் சங்கம் போன்றவற்றில் மிகவும் பொறுப்பான பதவிகளை வகித்து அவற்றின் சிறப்பான செயல்பாட்டிற்கு வழிகாட்டிய சேவையாளராவார்.

அரியாலையில் பாரம்பரியமாகவும் மிகவும் விமரிசையாகவும் கொண்டாடப்படும் அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவின் போது சிறந்த கலைஞருக்கான விருதைப் பெற்று கௌரவிக்கப்பட்ட சிறப்புக்குரிய பெருமகனாக விளங்கிய இவர் இன்று எம்மத்தியில் இல்லை என்பதை நினைக்கும்போது ஆறாத துயரமாக இருக்கின்றது.

அன்னாரது மறைவால் துயருறும் அவரின் மனைவி, பிள்ளைகளுக்கும், உற்றார், உறவினருக்கும் ஏனைய நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்

ஓம் சாந்தி' சாந்தி'' சாந்தி'''

**பேராசிரியர் க. மோகனதாஸ்**
முன்னாள் துணைவேந்தர்
யாழ். பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்மையும் சங்க விசுவாசமும் கொண்ட ஓர் தொழிற் சங்கவாதி

ஆசிரியர் சேவையில் இணைந்து கொண்ட காலத்திலிருந்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தில் அங்கத்தவராக இணைந்து கொண்ட திரு. த. பஞ்சலிங்கம், 1971 இல் சங்கத்தின் பெல்மதுளைக் கிளையின் செயலாளராகத் தெரிவுசெய்யப்பட்டு தொழிற்சங்கப் பணியைத் தொடங்கினார்.

அவரின் நேர்மையான, சுயநலமற்ற தொழிற் சங்கப் பணி யாவராலும் கவரப்பட்டு 1979 இல் சங்கத்தின் சிரேஸ்ட துணைப் பொதுச் செயலாளராக மிகப் பெரும்பான்மை வாக்குகளுடன் தெரிவு செய்யப்பட்டார். அன்றிலிருந்து சங்கத்திற்கும் சங்கத் தலைமைக்கும் முழுமையான விசுவாசத்துடனும், அர்ப்பணிப் புடனும் தொழிற் சங்கப் பணியாற்றினார்.

தமிழர் ஆசிரியர்களின் பிரச்சினைகளை, ஆணித்தரமாக முன்வைத்து போராட்டம் நடாத்தி சாமத்தியமாக வென்றெடுத்துள்ளார்.

பொதுச் செயலாளர் பதவியை அண்மைக்காலத்தில் ஏற்பதற்குத் தயாரான நிலையில் அவரின் திடீர் மறைவு சங்கத்திற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாக அமைந்துவிட்டது. அவரின் சேவையையும், தொழிற்சங்கப் பணியையும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும், தமிழர் ஆசிரியர் உலகமும் என்றும் மறந்து விடாது.

அவரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திப்பதோடு, அவரின் இழப்பால் துயரடைந்துள்ள அவரின் குடும்பத்திற்கு ஆறுதலளிக்க எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

**நா. இராஜநாதன்**
தலைவர்,
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.

**தலைமை அலுவலகம்,**
442, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
27.04.2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சுவிற்கு நிகர் பஞ்சனே

பஞ்சலிங்கம் அவர்களின் திடீர் மரணம் அவரது குடும்பத்தையும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தையும், தமிழ்க் கல்விச் சமூகத்தையும் மீளாத் துயரில் ஆழ்த்தியுள்ளது. பஞ்சுவின் இழப்பு குடும்பத்திற்கு மாத்திரமல்ல தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கும், கல்விச் சமூகத்திற்கும் தனிப்பட்ட ரீதியில் எனக்கும் ஈடுசெய்ய முடியாத பாரிய இழப்பாகும்.

எனது ஆருயிர் நண்பனை, மதிநுட்ப ஆலோசகனை, மூத்த தானைத் தளபதியை இழந்துள்ளேன். இது ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். பஞ்சுவிற்கு நிகர் பஞ்சனே. அவ்விடத்தை யாரும் ஈடுசெய்யமுடியாது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தில் பஞ்சுவின் செயற்பாடு, நடாத்திய போராட்டம், சங்கத்தின் விசுவாசம், சங்கத்திற்காக உடல், பொருள் ஆகியவற்றின் அர்ப்பணிப்புக்கள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை.

சங்கத்தின் தீர்மானங்கள் எதுவும் பஞ்சுவின் ஆலோசனை, அங்கீகாரம் இன்றி நடந்தேறியதில்லை. சர்வதேச ரீதியில் சர்வதேச அமைப்புக்களுடனான தொடர்பும், அணுகுமுறையும், தொடர்புகொள்ளும் பாணியும் சங்கத்திற்குப் பாரிய பாராட்டைப் பெற்றுத் தந்துள்ளது.

யாழ் மாவட்டத்திலுள்ள ஏனைய அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், ஐக்கிய நாடுகளின் நிறுவனங்களுடான அணுகு முறையும், அமைதியான, நிதானமான தொடர்புமுறைகளும் சங்கத்திற்கு நற்பெயரையும் புகழையும் பாராட்டுக்களையும் பெற்றுத் தந்துள்ளது.

பஞ்சலிங்கத்திற்கு, முன்பள்ளிக் கல்வித்துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவி வழங்க திணைக்களத் தலைமை தயக்கம் காட்டிய போதும் பஞ்சுவின் கல்வித் தகைமை, தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ந்த தகைமைகளும் அப்பதவியையாவது கொடுக்கவேண்டும் என்ற சூழ்நிலை தவிர்க்க முடியாததொன்றாக அமைந்துவிட்டது.

எனினும் முன்பள்ளித்துறை பஞ்சு பதவி ஏற்றகாலத்திலிருந்து போர்க்கால நெருக்கடிச் சூழலுக்கு மத்தியிலும் பாரிய வளர்ச்சி அடைந்துள்ளமை பஞ்சுவின் நிர்வாகத் திறமைக்கும், முகாமைத் துவத்துக்கும் ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

பதவி கொடுக்கத் தயக்கம் காட்டிய திணைக்களத் தலைமை பஞ்சுவின் செயற்பாட்டைக் கண்கூடாகக் கண்டு பின்னர் பாராட் டுக்களை வழங்கியமை, பஞ்சுவின் சாணக்கியத்திற்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டு. எதிரிகளையும் தன்புன்சிரிப்பால், சாணக்கியத் தால் வெல்லும் திறமைசாலி.

சமூகசேவை, கலைத்துறை, நாடகத்துறை, எழுத்துத் துறை, உளநல ஆலோசனையும் வழிகாட்டலும் போன்றதுறை களில் பஞ்சுவின் சேவையும் அர்ப்பணிப்பும் பலராலும் பாராட்டப் பட்டுள்ளது.

1971 ஆம் ஆண்டில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தின் கிளைச் செயலாளராகத் தொழிற்சங்கப் பணியில் காலடி வைத்த பஞ்சு அன்றிலிருந்து எனது தோழனாக, எனது வலது கரமாக இருந்து வந்தார்.

1979 ஆம் ஆண்டில் நான் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்ட போது சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளராக தெரிவு செய்யப்பட்டு அன்றிலிருந்து இணைந்து பணியாற்றி வந்தோம்.

சங்கத் தலைமைக்கு என்றும் விசுவாசமாகவும் முழு அர்ப் பணிப்புடனும் பணியாற்றி, 2008 ஏப்பிரல் கடைசி வாரத்தில் பொதுச் செயலாளராகப் பதவியேற்க இருந்த பஞ்சலிங்கம் திடீரென மறைந்த செய்தி மீளமுடியாத அதிர்ச்சியிலும் துயரி லும் எம்மை ஆழ்த்தியுள்ளது. இக்கட்டான நிலையில் குடும்பத் தையும், சங்கத்தையும் விட்டு பஞ்சு சிவனடி அடைந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருங்கக்கூறின், தமிழினம் ஒரு நல்ல கல்வியியலாளனை, மதிநுட்பவியலாளனை, சாணக்கியனை, தொழிற்சங்கத் தலைவனை, சமூக சேவையாளனை, கலைஞனை, நடிகனை, எழுத்தாளனை, கவிஞனை, - ஒரு சர்வகலாவல்லவனை இலங்கைத் தமிழ்ச் சமூகம் இழந்துள்ளது.

இவரின் இழப்பு ஒரு புறம், அவரின் இறுதிச் சடங்கிலாவது கலந்துகொண்டு இறுதி அஞ்சலி செலுத்தமுடியாத போர்க்காலச் சூழல் மறுபுறத்தில் வாட்டிக் கொண்டிருந்த இவ் வேளையில் தகவல்தொழில்நுட்ப விருத்தியின் ஊடாக எனக்கு அஞ்சலி செலுத்த கடவுள் அளித்த வாய்ப்பு எனது துயரத்தை குடும்பத்துடனும் ஆசிரிய சமூகத்துடனும் பகிர்ந்து கொள்ள வாய்ப்பளித்துள்ளது.

அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாகச் செலுத்துவோமாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**த. மகாசிவம்**
(இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின்
பொதுச் செயலாளர், கல்வி அமைச்சின்
நிக்கொட் (Necord) செயற்றிட்ட இணைப்பாளர்)

**(இறுதி அஞ்சலியில் ஆற்றிய உரை)**

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருந்தால் பஞ்சு – எழுந்தால் பஞ்சன்

உங்கள் வாழ்வு ஒரு புத்தகம். அப்புத்தகத்தில் பல அத்தியாயங்கள் இருக்கும். அதேபோல உங்கள் வாழ்க்கையையும் நான்கு முக்கிய அத்தியாயங்களாகப் பார்க்கையில் அவையாவன. 1) நடிகன் 2) ஆசிரியர், அதிபர், உதவிக்கல்விப் பணிப்பாளர் 3) தொழிற்சங்கவாதி 4) சமூகத்தொண்டன் இன்னும் பல.

ஆசிரியத் தொழில் நியமனம் கிடைத்தவுடன் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் அங்கத்தவனாய்ச் சேர்ந்து பின்னர் 1971 இல் மலையகக் கிளையின் செயலாளராக தேர்தலில் வெற்றி பெற்று தொழிற்சங்கவாதியாக வீறுநடை போட்டாய்.

உங்களுடன் எனது அறிமுகம் தொழிற்சங்கத்தின் ஊடாகக் கிடைத்தது. அதில் நான் உங்கள் அமைதியான நிதானமான செயற்பாட்டைக் காணும் சந்தர்ப்பம் கிடைத்தது. பலர் பஞ்சு ஓர் அமைதியானவன் என்று கூறுவார்கள். அது முற்றிலும் உண்மை.

ஆனால் சங்க அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டதும் அமைதியாக இருந்த பஞ்சு எழுந்து நின்றவுடன் பஞ்சு இல்லை. பஞ்சன் என்ற தொனியுடன் அழகான உச்சரிப்புடன் கடுமையான சட்டதிட்டங்கள் கூடிய வார்த்தையுடன் பேசிய பேச்சுக்கள் தான் எம் கண்முன் நிற்கின்றன.

இறுதியில் அமைச்சர்கள், செயலாளர்கள், கல்விப் பணிப்பாளர்கள், கூட்டங்களில் விட்டு வெளியேறிய காட்சிகள் எத்தனை எத்தனை. பின்னர் உங்கள் கருத்து சரியென உடன்பாட்டிற்கு வந்தவர்களை நாம் பார்த்திருக்கிறோம்.

ஆசிரியர்களின் மாணவர்களின் இனத்தின் போராட்டங்களிற்கு நீண்டதூரம் கடும் வெயிலில் நடைப்பயணம் செய்தாய்.

சங்க அங்கத்தவர்களை அழைத்து மேதினக் கூட்டங்கள், ஊர்வலங்களுக்குத் தலைமை தாங்கி வழிநடத்தி வெற்றி கண்டாய்.

உங்கள் பணியில்தான் நாணயத்தின் இருபக்கம். அதில் ஒன்று கடமை. மற்றது உரிமை. இரண்டையும் மிகவும் உச்சமாக மதித்துக் கடமை புரிந்தீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் பேச்சில் எழுத்தில் அழகிய தமிழ்மொழி கொஞ்சி விளையாடும். தேவை ஏற்படும்போது ஆங்கிலத்தில் பேச்சும் எழுத்தும் சிறப்பாக இருக்கும்.

நீங்கள் முன்பள்ளியின் உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவி ஏற்றபோது சிரித்தவர்கள் பின் யாழ் மாவட்ட இணைப் பாளராக இருந்து அர்ப்பணிப்புடன் கூடிய பணியைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள்.

எத்தனை' எத்தனை' ஆசிரிய நியமனங்கள் இனத்தின் மாணவர்தொகையை உலக வங்கிக்கு சமர்ப்பித்து பட்டதாரிகள், தொண்டர் ஆசிரியர் (க.பொ.த - உ/த) நியமனங்களுக்காக உரிய வர்களுடன் போராடி வெற்றிபெற உழைத்தாய்.

அதிபர், ஆசிரியர் உள்வாங்கல்கள் உரிய காலத்தில் நேர்மையாக நடைபெற வேண்டுமென அமைச்சுடன் போராடி வெற்றி பெற்றமை.

உங்களுக்கு கோபம் வரும்போது பஞ்சுவை யாரும் பேசலாம். ஆனால் சங்கத்தை யாரும் குறை சொல்லக்கூடாது என்று கடும் தொனியில் கூறுவீர்கள்.

சர்வதேசத்தில் தொழிற்சங்கத்தை உயர்த்தினீர்கள். உலக ஆசிரியர் மாநாடு யப்பானில் நடைபெற்றபோது கலந்து கொண்டு உரையாற்றினீர்கள்.

வீட்டில் இருந்து இன்னும் 10 நிமிடத்தில் உன்னிடம் வருவேன் என்று சொல்லி வருவீர்கள். ஆனால் இன்று எத்தனை பத்து நிமிடம் பார்த்தும் காணவில்லையே.

உயர்வான தொழிற்சங்கவாதி, சிறந்த நண்பன், ஆளுமையுடைய தலைவன்.


**க. குமாரசாமி**
யாழ்.மாவட்டச் செயலாளர்,
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஜனநாயகத் தொழிற்சங்கத் தலைமைத்துவம் என்ற கருத்தரங்கில்
அமரர் உரையாற்றும் போது



முன்பள்ளிகள் சார்பாக IOM நிறுவனத்தினருடன் அமரர்
கலந்துரையாடும் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் நலனில் அக்கறை கொண்ட தொழிற்சங்கவாதி

கடந்த 03.04.2008 ஆம் திகதி நான் மட்டக்களப்புக்கு அலுவல் நிமித்தமாக பயணம் செய்துகொண்டிருக்கையில் திரு.த. மகாசிவம் அவர்கள் செல்லிடத் தொலைபேசியூடாக துயரமான செய்தியொன்றைத் தெரிவித்தார். திரு.த. பஞ்சலிங்கம் அவர்கள் காலமாகிவிட்டார் என்ற செய்திதான் அது. மிக நீண்டகாலமாக நண்பராக இருந்த ஒருவர் மறைந்து விட்டார் என்ற செய்தி எனக்கு அதிர்ச்சியையும் மிகுந்த மனவேதனையையும் தந்தது.

எனக்கும், அமரர் பஞ்சலிங்கம் அவர்களுக்குமிடையிலான தொடர்பு இருபது வருடங்களுக்கு மேலானது. 1982 ஆம் ஆண்டில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வருடாந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நான் யாழ்ப்பாணம் சென்றிருந்தபோது தான் அமரர் பஞ்சலிங்கம் அவர்களை முதன் முதலாகச் சந்தித்தேன். அன்றிலிருந்து என்னோடு மிக மதிப்பும் அன்பும் கொண்ட நண்பராக இருந்து வந்துள்ளார். இம்மாநாட்டில் நான் பிரச்சாரச் செயலாளராகவும், திரு.த. பஞ்சலிங்கம் அவர்கள் சிரேஸ்ட பொதுச் செயலாளராகவும் தெரிவாகி இருந்தோம். சங்கத்தின் கூட்டங்களின் போதும் செயற்பாடுகளின்போதும் அவரோடு உறவாடுவதற்கு எனக்கு பல சந்தர்ப்பங்கள் வாய்த்தன. அமரர் பஞ்சலிங்கம் அவர்கள் சுறுசுறுப்பான ஒரு நிர்வாகியாக இயங்கிக் கொண்டிருந்ததை அவரோடு சேர்ந்து பணியாற்றிய காலங்களில் என்னால் அறியக்கூடியதாக இருந்தது.

2001ஆம் ஆண்டில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைவராக நான் தெரிவுசெய்யப்பட்ட பின் தொழிற்சங்கப் பணிகள் தொடர்பாக அமரர் பஞ்சலிங்கம் அவர்கள் என்னுடன் நெருக்கமாக இணைந்து செயற்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மிகவும் ஈடுபாடு கொண்டவராக, விசுவாசத்துடன் அவர் செயற்பட்டதை நான் அறிவேன். அமைச்சர்கள், உயர்கல்வி அதிகாரிகள் ஆகியோருடன் கல்விப் பிரச்சினைகள், ஆசிரியர்களின் தொழில் சார் நலன்கள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்திய சந்தர்ப் பங்களில் தகவல்களை ஒழுங்குபடுத்தி முன்வைக்கும் அவரது திறனை நான் கண்டுள்ளேன். ஆசிரியர்களுடைய நலன்களில் மிகுந்த அக்கறைகொண்ட ஒரு தொழிற்சங்க நிர்வாகியாகத் தனது வாழ்க்கையை வாழ்ந்து முடித்துள்ளார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமே என்னையும் அவரை யும் இணைத்தது. ஆயினும் தொழிற்சங்க செயற்பாடுகளுக்கு அப்பால் என்னோடு அன்பும் மதிப்பும் கொண்ட ஒரு நல்ல நண்பராக இருந்தார். அத்தகைய நண்பர் ஒருவரின் மறைவு மிகுந்த கவலையைத் தந்தது, எனினும் அதைவிடப் பெரிய வேதனை நாட்டின் போக்குவரத்து நெருக்கடிகள் காரணமாக அன்னாரது இறுதிக்கிரியைகளில்கூட பங்குபற்ற முடியாமல் போய்விட்டமையே.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரது மனைவி, பிள்ளைகள், குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த அனுதா பங்களையும் தெரிவிக்கின்றேன்.

**சி. தண்டாயுதபாணி**
மாகாணக் கல்விப் பணிப்பாளர்

மாகாணக் கல்வித் திணைக்களம்,
கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.
21.04.2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல மனிதனை இழந்துவிட்டோம்

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிக்கொண்டிருந்த எம் ஊரவரும், அயலவருமான தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கம் அவர்களின் திடீர்மறைவு அறிந்து அதிர்ச்சியடைந்தேன்.

நல்ல சமூகப் பண்பாளராக, சாந்தமான குணநடையுள்ளவராக எல்லோராலும் மதிக்கப்பட்ட நல்ல மனிதனாக விளங்கிய பஞ்சலிங்கம் அவர்களின் இழப்பு சமூகத்திற்குப் பேரிழப்பாகும்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நல்ல பங்காளியாக விளங்கிய இவரது பணி சிறப்பாகக் குறிப்பிடக்கூடியது.

இவரது இழப்பால் துயருற்றிருக்கும் அரியாலையூர் சமூகத்திற்கும், அன்னாரின் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டிநிற்கின்றேன்.

**வீ. இராசையா**

மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வடமாகாணம்.

வரோதயநகர்,
திருகோணமலை.

பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரரின் இறுதி அஞ்சலி நிகழ்வில் யாழ் வலய கல்விப் பணிப்பாளர் ஆற்றிய உரை

அமரர் அவர்கள் முன்பள்ளி சார்பாக நிறையப் பணிகளை மேற்கொண்டுள்ளார். இதன் பயனாக கடந்த திங்கட்கிழமை என்னைச் சந்தித்து தென்மராட்சிப் பிரதேசம் பாதிக்கப்பட்ட பிரதேசம், அங்குள்ள பிள்ளைகளை முன்னேற்ற வேண்டும், அதற்குரிய நிறைய ஒழுங்குகளைச் செய்யவேண்டும் என்று கூறியிருந்தார்.

அது மட்டுமல்ல வலயத்தில் ஆறு முன்பள்ளிகளைத் தெரிவு செய்து நாங்கள் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை அன்பளிப்புச் செய்து அவற்றை முன்னேற்ற வேண்டும் எனக் கூறியதுடன், தென்மராட்சி வலய அலுவலகத்திற்குப் போதிய வளங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கூறியிருந்தார்.

முன்பள்ளிகளுக்கு இன்னும் நிறைய பயிற்சிகள் வழங்க வேண்டும். நீங்கள் என்னுடன் ஒத்துழையுங்கள். நாங்கள் எல்லோரும் சேர்ந்து இந்த ஐந்து வலயங்களிலும் செய்து முடிப்போம் என்று ஆவலோடு என்னுடன் உரையாடிய ஒரு உதவிக் கல்விப் பணிப்பாளர்.

உண்மையிலே அவரது இழப்பு அவருடைய குடும்பத்திற்கு வேதனை தருகின்ற போதிலும் எங்கள் கல்விச் சமூகத்திற்கு இதுவொரு பேரிழப்பாகும்.

உண்மையிலே நாங்கள் உந்துதல் அளிக்காமல் தானாகவே முன்வந்து தானாகவே நிறுவனங்களை ஒன்றிணைத்து முன்பள்ளிக்காக அரும்பணியாற்றிய ஒரு உதவிக் கல்விப் பணிப்பாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சலிங்கம் அவர்கள் உயர்ந்த குணமும், அமைதியும், உயர்ந்த பண்பும் கொண்டவர். முன்பள்ளிகளுக்குத் தலைவராக இருப்பதற்கு சகல வழிகளிலும் பொருத்தமுடையவராகத் திகழ்ந்தார். இறைவன் அவர் உயர்ந்த பதவியில் நீடிக்க விரும்ப வில்லை போலும்.

உண்மையிலே என்னுடைய கல்வி வலயப் பணிகள் சம்பந் தமாக எனக்கு உறுதுணையாகச் செயற்பட்டவர்.

இவருடைய இழப்பு எமக்கு ஒரு பேரிழப்பாகும். இவருடைய குடும்ப உறவுகளுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி அ. வேதநாயகம்**
யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர்.

பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்

அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரரின் இறுதி அஞ்சலி நிகழ்வில் இடம்பெற்ற வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் உரையிலிருந்து...

அமரர் பஞ்சலிங்கம் எம்முடன் சேர்ந்து ஆற்றிய பணிகள் பல. கடைசியாக அவர் முன்பள்ளிச் செயற்பாடுகளில் யாழ் மாவட்டத்தை இணைத்து நிறைய வேலைகள் செய்துள்ளார். அந்த வகையிலே இருவாரங்களுக்கு முன்பு என்னுடைய அலுவல கத்திற்கு வந்து அந்தப்பிள்ளைகளை அணுகிப் பலவற்றை வழங்கி அவர்களை வளப்படுத்துவதற்கும், அவர்களுடைய பௌதிக வளங்களைக் கட்டியெழுப்புவதற்கும் அதற்கு மேலாக இந்த தொழிற்சங்க வாழ்க்கை முக்கியமானது.

நான் ஆசிரியராக இருந்த காலத்திலிருந்தே அவருடைய தொழிற்சங்க சூழ்நிலையை நன்றாக அறியக்கூடியதாகவுள் ளது. அவர் மரணித்தபோது அவருடைய மரணச்செய்தி அவரு டைய நண்பர் சதாசிவம் அவர்களிடமிருந்து தான் கிடைத்தது. அந்தளவிற்கு அந்தசெய்தி எனக்குக் கிடைத்தபொழுது எனக்கு மிகவும் அதிர்ச்சியாக இருந்தது.

மிகவும் நெருக்கமாக என்னுடன் பழகியவர். அலுவலக ரீதியாக மட்டுமல்ல நண்பராகவும் அவருடன் நெருக்கமாகப் பழகக்கூடிய சந்தர்ப்பங்கள் பல எனக்குக்கிடைத்தன. பல விருந்துபசாரங்களிலும் இராப்போசண விருந்துகளிலும் கலந்து கொள்ளக்கூடிய வாய்ப்புக்கள் கிடைத்தன.

இலங்கைத் தொழிற்சங்கம் நடாத்திய பல தேசிய மகா நாடுகளுக்கு நான் அழைக்கப்பட்டேன். பல முரண்பாடுகள் எனக்கும் அவருக்கும் இடையே இருந்தது. அவ்முரண்பாடுகளைத் தீர்க்கும் வல்லமை அவரிடம் இருந்தது. அத்தகைய ஒரு சீரிய பாலகனை இழந்து தவிக்கும் ஆசிரியப் பெருந்தகைகள் குறிப் பாக அவருடைய குடும்பத்தினர்கள் அவர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அவருடைய குழந்தைகள் அவரைப்போன்று வளர வேண்டும் அதற்கு எல்லாம்வல்ல இறைவன் துணைபுரிவார்.

**ப. விக்னேஸ்வரன்**
- வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசரமாக ஓய்வு பெற்றதேன்?

03.04.2008 வியாழக்கிழமை அதிகாலையில் பஞ்சலிங்கம் சேர் சென்றுவிட்டார் என்ற செய்தி என் சிந்தையை சிதறடித்து இதயம் கனக்க வைத்தது. அகில இலங்கையின் ஆசிரியத்துவத் தையே தழைக்கச் செய்தவர்.

ஆசிரியர்களின் உரிமைகளுக்காக ஓங்கி ஒலித்தவர். ஆசிரியராய், அதிபராய், கல்வியதிகாரியாய் இன்முகத்தோடு பணிபுரிந்த அவர் உறங்கிக்கிடந்த முன்பள்ளித் துறையை புத்துணர்ச்சி பெறச்செய்து யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்து முன்பள்ளிகளிலும் அக்கறையும் ஈடுபாடும் கொண்டு சேவையாற்றி அனைவரது உள்ளங்களிலும் இடம் பிடித்துக் கொண்டவர்.

அலுவலகத்தில் அவரைத்தேடி யார் வந்தாலும் புன்சிரிப் போடு அழைத்து, அமரச்செய்து, அவர்களோடு அளவளாவி அவர்களது குறை நீக்குகின்ற உத்தமர். எங்கள் அலுவலகத்திலே எந்நாளும் எங்களோடு கூடியிருந்து நகைச்சுவையாகப் பேசுகின்ற, கோபம் கொள்ளாத உள்ளம் அவருக்கு. எங்கள் வலயத்தின் நிகழ்வுகள் எல்லாவற்றிலும் உதவிபுரிந்து செயற் படுகின்ற இயல்புடையவர்.

ஒரு தடவை எங்கள் வலய நலன்புரிச் சங்கத்தின் பிரியாவிடை வைபவத்திலே சிவாஜியாக நடித்த அந்த அருமையான நிகழ்வு எல்லோர் மனதிலும் நிறைந்து நிற்கின்றது.

பஞ்சலிங்கம் சேர் சமூக சேவையாளராகத் தன் வாழ்நாளின் பெரும் பகுதியைப் பிறருக்காக அர்ப்பணித்த சேவையாளர். எங்களோடு பேசும்போது தன்னுடைய குடும்பத்தைப்பற்றி அடிக்கடி பேசுவார். பெண்பிள்ளைகள் இல்லையென்றாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கு வரப்போகும் மருமகள்மாரை எண்ணி மகிழ்வார். ஆனால் அவை எல்லாவற்றையும் காணுவதற்கு முன்னரே தன்னுடைய அழகான மனைவியையும் இளம் பிள்ளைகளையும் நடுவழியில் விட்டுவிட்டு அவசரமாகச் சென்றதேனோ?

பஞ்சலிங்கம் சேர் நீங்கள் மணிவிழாக்கண்டு ஓய்வுபெறும் போது நாங்கள் விழாவெடுத்து மகிழ்வோடு வழியனுப்பக் காத்திருந்தோம். ஆனால் நீங்கள் எவருக்குமே சொல்லாது நிரந்தரமாகவே ஓய்வுபெற்று விட்டீர்கள்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க நீங்கள் இவ்வுலகிலே வாழ்வாங்கு வாழ்ந்தவர். ஆகையினால் நிச்சயமாக நீங்கள் சாந்தி பெறுவீர்கள்.

இதயம் கனக்க உங்கள் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திப்ப தோடு உங்கள் குடும்பம் ஆறுதலடையவும், உயர்வடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி மீரா அருள்நேசன்**
உதவிக் கல்விப் பணிப்பாளர்
(தமிழ்த்துறை)

வலயக் கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் இரங்கல் செய்தி

அமரர் த. பஞ்சலிங்கம் அவர்களுக்கு இரங்கற் செய்தி எழுதும்போது எனது மனம் மிகவும் வேதனைப்படுகின்றது.

அவர் சிறந்த கல்விமானாக, ஒரு ஆசாரசீலனாக, நல்ல ஆசானாக, மாபெரும் கலைஞனாக, உற்சாகமும் துணிச்சலுமிக்க தொழிற்சங்கவாதியாக இருந்து தமது சமுதாயத்திற்கு மாபெரும் சேவையாற்றியவர்.

இவர் ஒரு சகல துறைகளிலும் வளம்பெற்று விளங்கிய ஒரு சகலகலாவல்லவன் எனக் கூறும்போது எனது மனம் பெருமையடைகின்றது. கல்விச் சேவையில் பல ஆண்டு சேவைசெய்த இவர் தனது இறுதிக்காலத்தில் மிகவும் நலிந்து கிடக்கும் முன்பள்ளித்துறைகளை முன்னேற்றுவதற்கும் அயராது பாடு பட்டார்.

சிறுபிள்ளைப் பராயக்கல்வி அபிவிருத்தியின் முக்கியத்துவத்தை மிகவும் தெளிவாக உணர்ந்த இவர் அரச / அரச சார்பற்ற நிறுவனங்களைத் தட்டி எழுப்பி அத்துறையின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டார்.

முன்பள்ளிக் கல்வியில் உதவிக்கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றிய காலத்திலே அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், அத் துறையில் ஈடுபட்டு முன்னின்று உழைத்தார். முன்பள்ளிகளின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதாலும் முன்பள்ளி ஆசிரியரின் வாண்மை விருத்தியை மேம்படுத்துவதாலும் முன்பள்ளி அபிவிருத்தியில் சமூகத்தின் பங்கினை மேம்படுத்துவதாலும் இவர் ஆற்றிய பணி அளப்பரியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது இழப்பால் துயருற்று இருக்கும் அன்னாரின் மனைவி, பிள்ளைகள், உறவினருக்கு ஆறுதல் கூற சிறியேனுக்கு வார்த்தைகள் எதுவுமில்லை என்றபோதும் உலக வாழ்வு நிலையற்றது .

**'இன்றிருப்போர் நாளை யில்லை என்ற**
**பெருமையுடைத்து இவ் வுலகு'**

என்ற பதத்திற்கு ஏற்ப நாம் ஆறுதல் அடைவோமாக.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரது பிள்ளைகள் அவரைப் போன்றே ஒப்பாரும் மிக்காரும் இல்லாத அளவிற்கு உயர்ந்து வாழ்ந்து தந்தை பெயர் சொல்லவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி' சாந்தி' சாந்தி'

உமா சங்கரலிங்கம்
திட்ட அலுவலர்,
சிறுவர் பாதுகாப்பு இலங்கை,
யாழ்ப்பாணம்.

செயற்பால தோரும் அறனே ஒருவற்கு
உயற்பால தோரும் பழி.

அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழும் இல.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முன்பள்ளி ஆசிரியர் குழாத்துடன் அமரர்




UNHCR நிதி அனுசரணையுடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் நடாத்திய
அபிவிருத்தி வாழ்வாதார பயிற்சி செயற்திட்ட நிகழ்வில் அமரர்
உரையாற்றும் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேய நிறுவனத்தின் இரங்கல் செய்தி

மனிதநேயம் எனும் உன்னதமான பண்பினை அடியொற்றிப் பல செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுகின் றன. சிறார்களின் ஆளுமை அவர்களின் மனோரீதியான பலத்தினை மேம் படுத்தல் சமூகத்தின் ஊடான ஒருங்கமைப்பு என்பவற்றினை அடிநாதமாக, உள்ளீடாக வைத்து முன்பள்ளிகள் அமைக் கப்பட்டு வருகின்றன.

இவ்வகையில் முன்பள்ளிகளை ஒருங்கிணைத்து ஆற்றுப் படுத்தும் ஒரு உதவு நிலையாளராக தனது பதவியினூடு அமரர் த. பஞ்சலிங்கம் அவர்கள் செயற்பட்டுவந்தார்.

முன்பள்ளிகளுக்கு அடிப்படைத் தேவைகளை இனங்காணு தல் அவற்றினை நிவர்த்தி செய்யும் தன்மையினை சாத்திய மாக்கலும் அவ்வெளிப்பாடுகளாக இருந்தமை குறிப்பிடத் தக்கவையாகும்.

இத்தகைய செயற்பாட்டின் ஊடாக சமாதான மேன்மையினை சிறுவர்கள் ஊடாக எட்டும் இலக்கினையடையத் தன் உழைப்பினைக் கருவியாக்கி நித்தமும் தளர்ச்சி இல்லாது பாடுபட்டார்.

இத்தகைய பண்பாளர் இயற்கை எய்தியமை அவரோடு இணைந்து செயற்பட்ட நண்பர்களுக்கும், நாட்டுக்கும் ஈடு செய்ய முடியாத வெற்றிடம் ஆகும்.

- மனித நேய நிறுவன நண்பர்கள் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண கல்வித்துறைக்கு பேரிழப்பு

**" நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்து இவ்வுலகு"**

- தெய்வப்புலவர் வள்ளுவர்

என்ற வள்ளுவப் பெருமான் குறளுக்கு ஏற்ப மறைந்தவரே என்றென்றும் என் பெருமதிப்புக்குரிய அமரர் தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கம் அவர்கள்.

இவர் யாழ் கல்விவலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி), இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் ஆகிய முக்கிய பதவிகளை வகித்து நின்று தனது பிறந்த இடமான அரியாலைக்கு மட்டுமல்லாது இலங்கைத் தமிழ் மக்களுக்கே அணி சேர்த்து நின்ற பெரியார்.

மனிதன் தான் வாழும் காலத்தே தன் குடும்பத்துக்கு என்ன செய்தான் என்பதனைப் பற்றி மக்கள் அலட்டிக் கொள்ள மாட்டார்கள். தான் சார்ந்த இனத்துக்கு என்ன செய்தான் என்பதனையே பாராட்டிப் பேசுவார்கள்.

இப்பாராட்டினைத் தான் வாழும் காலத்தே பெற்றுவிட்டார் அமரர் அவர்கள். இவரைப் பல்கலைவேந்தர் எனவும் யான் கூறுவேன். நாடகக் கலைஞர், சிறந்த மேடைப்பேச்சாளர், ஊரறிந்த சமூக சேவையாளர்.

யாழ்/ பரியோவான் கல்லூரியின் பழைய மாணவர் நானும் அக்கல்லூரியின் பழைய மாணவன் என்பதில் தனிமனித நிறைவு காண்கின்றேன். சிறந்த இடத்தில் திருமணம் செய்து இன்று தனது அருமைத்துணைவியார் திருமதி கமலாதேவி அவர்களையும் முக்கண்களான வரகுணன் (ஊடகவியல் மாணவன்) ஹரிகரன், மதுரதன் என மூன்று ஆண் மக்களையும் எவரும் எதிர்பாராத வகையில் ஆறாத் துயரில் மூழ்கடித்து விட்டுச் சென்றுவிட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுக்கு இறைவன் தான் உளத்தேற்றம் அளிக்க வேண்டும் என் பிரார்த்தனை எனக்கூறி, குடும்பத்தினருக்கு எனது அகில இலங்கை கண்ணதாசன் மன்றம் சார்பிலும் என் சார்பிலும் அனுதாபங்களைத் துயர மத்தியில் தெரிவிக்கின்றேன்.

நிறைந்த சமயப் பற்றாளராகவும், இறைபக்தனாகவும், இனப்பற்றாளராகவும் மேலாக தமிழ்ப் பற்றாளராகவும் எம் மத்தியில் விளங்கி நின்றார்.

இவரது இழப்பு கல்வித்துறை சார்ந்தோருக்கும் ஏனையோருக்கும் எதிர்பாராத பேரிழப்பு எனக்கூறி அன்னார் தம் ஆத்ம சாந்திக்காக இறைவனை இருகரமேந்திப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி!

துயரமத்தியில்
**கலாபூசணம் வேலணை வேணியன் J.P**
கொழும்பு மாநகரசபை உறுப்பினர்,
மேலதிக மக்கள் முன்னணி உபதலைவர்,
தலைவர், அகில இலங்கை கண்ணதாசன் மன்றம்.

**துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்**
**இல்வாழ்வான் என்பான் துணை.**

**இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்**
**முயல்வாருள் எல்லாம் தலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடுவழி ஆற்றலன்

மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதே வாழ்வு. அது அமையப்பெறுவது பேறு. இந்தப் பேறு சித்திக்கப் பெற்றவர் அமரர் தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கம் அவர்கள்.

பன்முகத்தன்மையும், ஆற்றலும் ஒருங்கே கைகூடிய பெருமைக்குரியவராக அவர் வாழ்ந்து காட்டியவர்.

சுமார் மூன்று தசாப்தத்திற்கு முன்னர் அமரர் டி. எஸ். கே. வணசிங்கா அவர்களால் அறிமுகம் செய்யப்பெற்றவர், இளம் ஆசிரிய தொழிற்சங்கவாதி த. பஞ்சலிங்கம் அவர்கள்.

அந்த நாள்களில் துடிப்பும் மிடுக்கும் மிக்க ஒருவராகப் பஞ்சலிங்கம் அவர்களை நான் பார்த்தேன்.

காலம், அவர்களை சாந்தசொரூபனாக பக்குவப்படுத்தியது.

1977 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் என் மாட்டில் பசுமையாக உள்ளது.

பஞ்சலிங்கம் அவர்களின் Lobbying ஆற்றலை இக்கால கட்டத்தில் நான் நேரடியாக இனங்கண்டு தரிசித்தேன். யாழ்ப்பாணம் தவிர்ந்த வெளிமாவட்ட ஆசிரியப் பிரதிநிதிகளுடன் அமரரது ஊடுவழி ஆற்றல் சிறந்து நின்று அவர் எதிர்பார்த்த அறுவடை சித்திக்கப்பெற்றது.

இளம் பஞ்சலிங்கத்தின் ஊடுவழி ஆற்றலை அக்காலை தரிசித்து நின்ற ஆசிரிய தொழிற்சங்கவாதிகள் பலர் இன்று எம்மிடையே இல்லை. என் நினைவில் அந்த அணியில் மிஞ்சி இருப்பவர்கள் இருவரையே அசைபோட முடிகின்றது.

ஒருவர் காங்கேசந்துறை மணியம் மாஸ்டர், மற்றவர் நல்லூர் க. தவராசா மாஸ்டர். அமரரின் மரணச்சடங்கில் குறித்த இருவரையும் பார்க்கமுடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் சந்திப்பு முப்பது ஆண்டுகளுக்கு முந்திய நிகழ்வுகளை அசைபோட வைத்தது.

ஊடுவழி ஆற்றலின் பிறிதொரு வெளிப்பாடு அமரரின் மன்னர்களைத் தெரிதல். அவர் எந்த அமைப்பிலும் ஆற்றல் மிக்கவர்களை இனங்கண்டு முடிசூட்டுவதில் வல்லவர். இவரின் King Maker ஆற்றலை ஒரு சிலரே அடையாளம் காண்பர்.

அமரர் பஞ்சலிங்கம் அவர்களை ஆசிரியராக, அதிபராக, கல்வியதிகாரியாக, தொழிற்சங்கவாதியாக, நடிகனாக, கலைஞ னாக, பேச்சாளராக பலர் பார்த்தனர்.

அவரின் ஊடுவழி (Lobbying) ஆற்றலைத் தரிசித்தவர்கள் மிகச் சிலர்.

நண்பன் பஞ்சலிங்கத்தின் பிரிவு காலத்தால் முந்தியது.

காலத்தால் முந்திய பிரிவு அனைவரையும் சோகக்கடலில் ஆழ்த்தி விட்டது.

படைப்பின் இரகசியத்தை நாம் வெல்ல முடியாது.

இ. சங்கர்

தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையான் வரும்.

எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவர் பெயர் என்றும் வாழும்

அமரர் தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கம் பண்பாளர். அவர் ஒரு நல்லாசிரியனாகப் பணிபுரிந்த காலத்திலேயே உதயனுடன் உறவு கொண்டிருந்தவர். கல்வித்துறை சார்ந்த விடயங்களை மட்டுமன்றி கலை, விளையாட்டுத்துறை தொடர்புடைய தகவல்களையும் பத்திரிகையில் பிரசுரிக்கும் ஆர்வத்துடன் அடிக்கடி எங்கள் அலுவலகம் வருவார்.

ஓர் ஆசிரியர், அதிபர், கல்வி அதிகாரி என்ற பஞ்சலிங் கத்திடம் கலை அபிமானமும், மொழிப்பற்றும் எல்லாவற்றுக்கும் சமமாக தாம் வாழ்ந்த கிராமத்தின் மீதான அதீத பற்றும் பரவி இருந்ததை அவதானிக்க முடிந்தது.

தமக்குப் பிடித்தவற்றை மட்டும் மற்றையோர் கூற வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எதுவுமில்லாமல் எக்கருத்தையும் முதலில் ஏற்றுச் சீரணித்துக் கொண்டு, தமது நிலைப்பாட்டை நிதானமாகவும் யதார்த்தபூர்வமாகவும் வெளிப்படுத்துவதில் அவரிடம் ஒரு தனிப்போக்கு இருந்ததைப் பல சந்தர்ப்பங்களில் அவதானிக்க முடிந்தது.

அவர் சார்ந்த ஆசிரியர் தொழிற்சங்கத்தின் செயற் பாடுகளில் உள்ள ஓட்டை, உடைசல்களை வார்த்தைகளிலும் சரி, எழுத்திலும் சரி எடுத்துக் காட்டும்போது அவர் ஆத்திரப் பட்டதில்லை. அந்தக் கருத்துகளை உள்வாங்கி, சீரணித்துக் கொண்டு தமது பக்கத்து நியாயத்தை ஆரவாரம் இல்லாமல் மென்மையாகக் கூறும் திறமை அவரிடத்தில் இருந்தது.

ஆசிரியர் பணி சீரியதும் சிறப்பானதும் மதிப்புக்குரிய ஒன்றுமாகும். அதில் வழுக்கலும் வடுக்களும் அடிக்கடி தோன்று வது பீடையாகிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் உலகம் இரண்டுபடுவது 'இயற்கை விதியாக' விளங்கியதும்; தொடர்வதும் ஒன்றும் புதியதல்ல. ஆனால் ஒரு தொழிற்சங்கவாதி என்ற வகையில் ஆசிரியர்களின் நலன்களை ஓம்புவதிலும் மேம்படுத்துவதிலும் பஞ்சலிங்கம் அவர்கள் என்றும் பின்நின்றதாக இல்லை.

அதேவேளை ஆசிரியர் பணி தொடர்பாக ஆசிரியர்களிடம் உள்ள குறைபாடுகளை ஒப்புக்கொண்டு ஏற்றுக்கொண்டு அவற்றை நிவர்த்தி செய்வதில் உழைத்த பெருமகன் அவர்.

அவர் ஒரு சிறந்த நாடகக் கலைஞர் என்பதனை தாமாகக் கூறியதில்லை. அவரது மென்மையான பேச்சிலும் அமைதியான குணாம்சத்திலும் அவர் ஒரு கலைஞர் என்பதைப் புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. ஒருமுறை நேரில் கேட்டபோது, தமது கலை ஆர்வத்தை அடக்கமாகக் கூறினார். வழமையான புன்சிரிப்புடன் ஆத்திரப்படுபவர்களையும் ஆறவைக்கும் சக்தி அவரது புன்சிரிப்புக்கு இருந்தது.

சிரித்த முகம், இனிமையான உரையாடல், மென்மைப் போக்கு, எவரையும் அரவணைத்து உரிய வழிக்கு ஆற்றுப் படுத்தும் இயல்பு மற்றும் நேருக்குநேர் குறை குற்றங்களை வெளிப்படுத்தும் பண்பு ஆகியவற்றை இரைமீட்டல் செய்யும் போது, அவர் அமரராகி விட்டார் என்று இன்னும் எண்ணத் தூண்டவில்லை.

எவருக்கும் உதவவேண்டும் என்ற அவரது சிறப்பியல்பு அவரது நண்பர்களால் மறக்க முடியாதது. அவர் சேவையும் பெயரும் நற்படிமமும் என்றும் வாழும்.

**ம.வ. கானமயில்நாதன்**
பிரதம ஆசிரியர்,
உதயன் - சஞ்சீவி

கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயல்வீரன்...

உலகில் பிறப்பவர்கள் ஒரு நாள் இறப்பது உலகநியதி ஆகும். வாழும் காலத்தில் சீரும் சிறப்புடனும். செயல்திறமையுடனும் வாழுகின்ற பலருக்குத் திடீரென மரணம் ஏற்படுவதும் நியதியாக இருக்கிறது.

ஆசிரியராகி, அதிபராகி, கல்விப்பணிப்பாளராகி அதிலும் முன்பள்ளிகளின் பிரிவுக்கு தனிக் கல்விப் பணிப்பாளராக நியமனம் செய்யப்பட்டு கொடுத்த, ஒப்படைத்த கடமையை மிகவும் சிறப்புடன் செயலாற்றி முன்பள்ளி ஆசிரியர்களின் நன்மதிப்பையும், பாராட்டையும் பெற்று செயல்வீரனாக விளங்கி மறுமைக்குள் பிரவேசித்த அமரர் பஞ்சலிங்கம் தான் பிறந்த கிராமத்திற்கும் தான் கல்விகற்ற யாழ் பரியோவான் கல்லூரிக்கும் புகழ்தேடிக் கொடுத்தவர்களுள் அமரர் முதன்மையிடத்தைப் பெறுகின்றார்.

அவரது திடீர் மரணத்தை கேள்விப்பட்ட அவரின் அன்பிற்குரிய ஆசிரியராக இருக்கும் எனக்கு இன்றுவரை துயர் நீங்காமல் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அரசாங்கப் பதவியில் பணியாற்றினாலும் தனது ஆரம்பகால தொழிற்சங்கப் போராட்டங்களையும், ஆசிரியர்களின் தொழில் பயன்களுக்குப் போராடி, கலந்துரையாடி வெற்றிகண்ட சிறந்த மேன்மையான தொழிற்சங்கவாதியாகவும் இறுதிவரை வாழ்ந்து போராடியமை குறிப்பிடத்தக்கதாகும்.

அவர் தொழிற் சங்கத்திற்கும் ஆசிரியர் ஒவ்வொருவருக்கும் ஆற்றிய அரும்பெரும் சேவைகளை அவரது இறுதிச்சடங்கில் கலந்துகொண்ட மக்களின் திரள் வெளிப்படையாகக் காட்டி நிற்கின்றது.

**முன்பள்ளியின் தந்தையே!**

பகுதி பகுதியாக கிராமம் கிராமமாக, சிலவீடுகளிலும் இயங்கிவந்த முன்பள்ளிகளை ஒன்றிணைத்தாய், முன்பள்ளிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் முறையாகக் கல்வியைப்பெற வழிவகுத்தாய். அடித்தள வேலைத்திட்டங்களை வகுத்துச் செயற்பட்டாய், ஆசிரியர்களுக்கான பயிற்சியை அடிக்கடி, பகுதிபகுதியாக ஆசிரியர்களை அழைத்து வகுத்தாய், அறிவை ஊட்டினாய் முன்பள்ளிகள் மேலும் வளர்ச்சிபெற தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிடம் உதவிபெற்று அவற்றை வளம்படுத்தினாய். இவைகள் என்றும் மறக்கமுடியாத மைக்கல்கள் ஆகும்.

**இறுதியாக .......**

வந்தாய், போனாய் என்று இல்லாமல் மக்கள் மத்தியில் பெருமதிப்பைப் பெற்றுப் பெருமையோடு சென்றிருக்கின்றாய். இறைவா இவர் ஆற்றிய சேவைக்கு நன்றி தெரிவிக்கும் நாம் இவரிடம் குறைகள் காணப்பட்டால் குற்றங்கள் குறைகளை மன்னித்து நித்திய இளைப்பாறுதலையும் நீங்கா வெளிச்சத்தையும் வழங்க வேண்டும் என மன்றாடுவதோடு இவரது அன்புக்குரிய மனைவி, மூன்று பிள்ளைகள், சுற்றத்தார், உடன்பிறப்புக்கள் யாவரினது துயர்துடைக்கும் படியும் மன்றாடுகின்றேன்.

என்றும் நினைவில்
உனது அன்பிற்குரிய ஆசிரியர்
**செ. ப. ஜீவானந்தம்**

உங்களை நீங்களே மதிப்பது ஆணவம்.
பிறர் உங்களை மதிப்பதே பெருமை.

உண்மைக்குப் பயப்படுகிறவன் ஒருவருக்கும் பயப்பட மாட்டான்.

உதவி செய்பவனைத் தடுக்காதே.
தடுத்தால் பிச்சை எடுத்து அலைவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரியோவான் கல்லூரியின் புகழ்பூத்த பழைய மாணவன் த. பஞ்சலிங்கத்தை இழந்து நிற்கின்றோம்

பழைய மாணவர் சங்கத் தலைவர் என்ற முறையிலும் எமது அயலவர் என்ற முறையிலும் அவரை நீண்டகாலமாக அறிவேன்.

அமரர் த.பஞ்சலிங்கம் அவர்கள் எமது பாடசாலை மரபுகளையும் விழுமியங்களையும் பேணிக்காப்பதிலும் தொடர்ந்து கடைப்பிடிப்பதிலும் கொண்டுள்ள பற்றுறுதி மெச்சத்தக்கது.

எமது சங்கத்தின் பொதுச்சபை அங்கத்தவரான இவர் நடப்பு வருட நிர்வாகசபை உறுப்பினருமாவார். கல்லூரியில் நடைபெறும் வைபவங்களில் பங்குபற்றிச் சிறப்பிக்கும் இவர் குறிப்பாக எமது பெருமதிப்புக்குரிய ஆசிரியர்களைக் கௌரவிக்கும் ஆசிரியதின வைபவத்தில் சிறப்பான பாராட்டுரை நிகழ்த்தியதை இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூர்கின்றேன்.

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் உதவிப் பணிப்பாளராகிய இவர் முன்பள்ளி சிறுவர்களின் முன்னேற்றத்துக்காகப் பெரிதும் உழைத்த கல்விமானாவார். உண்மையிலேயே அந்த வயதிலேயே மாணவர்களின் உள்ளார்ந்த விருத்திக்கு அத்திவாரம் இடப்படும் காலப்பகுதியாகும்.

இவ்விடயத்தைப் பெற்றோர்கள் மத்தியில் எடுத்து விளக்கிய பெருமகனாவார். சிறந்த பேச்சாளரான இவரின் கவர்ச்சிகரமான பொருள் பொறித்த பிரசாரம் யாழ்மாவட்டத்தில் நல்ல பயனை அளித்ததாக பல கல்வி ஆர்வலர்கள் குறிப்பிட்டதை இங்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ப்பணிப்பு உணர்வுடன் தொழில்புரியும் இவர் காலையில் தொழிலுக்கு வெளிக்கிட்டுச் சென்றால் இருட்டிய பின்பே வீட்டுக்கு வருவார். தனது குடும்ப நலனில், உணவில் அக்கறை இல்லாமல் உழைக்கும் கல்வி அதிகாரி என வர்ணிக்கப் பல்லோ ருடன் நானும் உடன்படுகின்றேன். அப்படியான நிலைமைகளை அவதானித்துள்ளேன். அந்தவகையில் அவரின் சேவை மனப் பான்மையைப் பாராட்ட விரும்புகின்றேன்.

எல்லாம் எப்பவோ முடிந்தகாரியம் என்ற யோகர்சுவாமி களின் அருள்வாக்குக்கு அமைய ஆறுதல் அடைவதோடு அவரை இழந்து நிற்கும் அவரின் மனைவி, பிள்ளைகள், உற்றார் கள், நண்பர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப் போமாக.

**ந. குகதாசன்**
பழைய மாணவர் சங்கம்,
பரியோவான் கல்லூரி.

பொறாமையும் ஆணவத்தையும் விட்டுவிடு.
பிறர் நலத்திற்காக ஒற்றுமையாக பணி செய்யக் கற்றுக்கொள்.
நம் நாட்டிற்கு மிகவும் தேவையானது இதுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு நெஞ்சம் கொண்ட பண்பாளன்
# அமரர் தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கம்

01. அரியாலையூர் இழந்து நிற்கும். மக்கள் சேவையை மனதில் பதித்த. மனிதாபிமான சிந்தனையுடன் செய லாற்றிய. அன்புள்ளம் கொண்ட பண்பாளனைப் பற்றிய எனது நினைவலைகள்....

02. எனது இவ் ஆக்கம் அமரரின் சேவைக்கு இலக்கான அரியாலையூரையும் அமரருடனான எமது தனிப்பட்ட தொடர்பையும் சம்பந்தப்படுத்தியதாக இருக்கும் என்பதை ஆரம்பத்திலேயே தெளிவாக்க விரும்புகின்றேன்.

03. அரியாலையூர் ஈன்றெடுத்த உத்தம புருஷர்களில் ஒருவ ராகக் கணிக்கப்பட வேண்டியவர் அமரர் த. பஞ்சலிங்கம் அவர்கள்.

04. அமரர் அவர்கள், அவரை அறிந்த அனைவரினதும் அன்பிற்கும் மதிப்பிற்கும் பாத்திரமாக எம்மிடையே விளங்கியவர். எமது ஊரில் இயங்கும் பல்வேறு பொது அமைப்புக்களிலும் தன்னை இணைத்து அரியாலை வாழ் மக்களின் சமூக. பொருளாதார. கலை, கல்வித் துறை வளர்ச்சிக்குத் தன்னாலான பங்களிப்பைக் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக வழங்கிய பெரு மகன். அமரரின் ஈடுபாடு மிக நெருக்கமாக இருந்த ஒரு சில அமைப்புக்களை இங்கே குறிப்பிடுவது பொருத் தமானதெனக் கருதுகிறேன். அரியாலை சனசமூக நிலையம். அரியாலை நாடக மன்றம். அரியாலை கலா மன்றம், அரியாலை சுதேசிய திருநாள் விழா அமைப்பு, அரியாலை ஐக்கிய கழகம். அரியாலை அபிவிருத்திச் சங்கம், ஆகியவற்றை இங்கே குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. முதலில், **அரியாலை சன சமூக நிலையத்துடனான** அமரரது தொடர்பு சம்பந்தமாக... சமூக சேவையில் ஈடுபாடுகாட்ட முன்வந்த காலத்திலிருந்தே இந்நிலையத்தின் அங்கத்த வராகத் தன்னை இணைத்து நிலைய வளர்ச்சிக்கு அரும் பெரும் சேவை ஆற்றியவர் அமரர். நிலையத்தின் நாடக, கலை, கல்வித்துறை சேவைகள் அவருடன் நேரடிச் சம்பந்தமானவை. நிலையத்தின் செயலாளராக, உப தலைவராக, மறையும்போது போஷகராக விளங்கியவர். கடந்த வருட நிலைய ஆண்டு விழாவில் பிரதம விருந்தி னராகத் தனது பாரியாருடன் கலந்து சிறப்பித்தமையை இங்கே நினைவு கூருகின்றேன். நிலையத்தின் முன் பள்ளியின் வளர்ச்சிக்கென தனது தொழில்சார் அரச திணைக்கள செயற்பாடுகளில் விசேட இடத்தை ஒதுக்கி செயற்பட்டதை நான் நன்கு அறிவேன். நிலையத்தின் 60 ஆம் ஆண்டு விழாவை சிறப்பாக 2009 ஆம் ஆண்டு கொண்டாடுவதற்கு அடித்தளம் இடுவதற்காக அமைக்கப் பெற்ற அபிவிருத்திக் குழுவில் அங்கத்தவராக இருந்து எம்முடன் செயற்பட்டவர். அவரின் பல்வேறு துறைத் தொடர்புகளினால் 60 ஆம் ஆண்டு நிறைவுவிழா மிகவும் சிறப்பாக அமையப் பல்வேறு வழிகளிலும் நாம் பாடுபட வேண்டும் என்ற கருத்தை என்னுடன் பகிர்ந்து கொண்டவர். அமரர் த. பஞ்சலிங்கம் அவர்களினதும், அண்மையில் அமரத்துவம் அடைந்த முன்னாள் தலைவர்களும் நிலைய உயிர்நாடியாக விளங்கியவர்களுமாகிய சு. பாலசுந்தரம், S. T. கணநாதன் போன்றவர்களின் நினைவாக 60 ஆம் ஆண்டு விழா அமைவதற்கான சகலதையும் நிலையம் செய்யவேண்டும், செய்யும் என நம்புகின்றேன்.

06. அடுத்ததாக, **அரியாலை நாடக மன்றம், அரியாலை கலாமன்றம், அரியாலை ஐக்கிய கழகம்** ஆகியவற்றைக் குறிப்பிட்டு சில வார்த்தைகள். இவ் அமைப்புகளுள் முதலிரண்டும் கலை, நாடகத்துறையின் மேம்பாட்டிற் கென்றே இயங்கியவை. அரியாலை ஐக்கிய கழகம் இரு பெரும் பிரிவுகள் கொண்டது - விளையாட்டுத்துறை, கலைத்துறை, அரியாலை வாழ்மக்களின் கலைத்துறை ஈடுபாட்டை தொய்ய விடாது மெருகூட்டிச் செயற்பட்டவர் களுள் அமரரின் பங்கு அளப்பரியது. இவ்விடயம் பற்றி எனது உறவினரும், நண்பருமான ச. உருத்திரேஸ்வரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தனது ஆக்கத்தில் பதிக்க உள்ளார். ஆகவே இச்சிறு குறிப்புக்களுடன் இப்பகுதியை நிறைவு செய்கின்றேன்.

07. அடுத்ததாக, **அரியாலை சுதேசிய விழா அமைப்பு** பற்றியது. இலங்கையில், தமிழ் மக்கள் வாழும் எப்பகுதியிலும் காணப்படாத அமைப்பு எமது இவ் அமைப்பாகும். எமது முன்னோடிகளால் 1919 ஆம் ஆண்டு தூரதிருஷ்டியுடன் உருவாகப் பெற்றது. எமது அரியாலையூர் மக்களின் சமூக, பொருளாதார, கல்வி, கலை, கலாசார, தேசப்பற்று துறைகளைப் பின்னணியாக வைத்து உருவாக்கப்பட்ட இவ் அமைப்பு மூலம் எமது நாட்டுப் பற்று, பாரம்பரியம், கலை, கலாசார விழுமியங்கள், விளையாட்டுத்துறை, கல்வித் துறை வளர்ச்சி, மனிதாபிமான உணர்வு, தலைமைத்துவப் பண்பு, சமூக ஒற்றுமை போன்றவை ஆண்டுதோறும் சித்திரை வருடப்பிறப்பையொட்டி எம் மக்களால் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டு வரும் விழாவினால் பறை சாற்றப்பட்டு முத்திரை பதிக்கப்படுகின்றது. அயல் கிராமத்தவர், யாழ். மாவட்ட வாழ் மக்கள் அனைவரும் வியந்து பாராட்டும் மகோன்னதமான இவ்விழாவுடன், குறிப்பாக கலை, நாடகத் துறையில், தனது ஆக்கபூர்வமான பங்களிப்பை ஆர்வமுடன் ஆண்டுதோறும் செய்து வந்த பெருமைக்குரியவர் அமரர் த. பஞ்சலிங்கம் அவர்கள்.

08. பொது அமைப்புக்களில் அடுத்ததாக **அரியாலை அபிவிருத்திச் சங்கத்துடனான** அமரரின் தொடர்பு எத்தகையது என்று பார்ப்போம், அரியாலைப் பிரதேசத்தின் சமூக, பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு 21.03.1981 இல் உருவாகிய அரியாலை அபிவிருத்திச் சங்கத்தில் அன்றிருந்தே தன்னை இணைத்து செயற்குழு உறுப்பினராக, அமரத்துவம் அடையும் வரை தொழில், தொழில் பயிற்சி உபகுழுத் தலைவராக விளங்கி எமது மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு அமரர் ஆற்றிய சேவையை அரியாலை அபிவிருத்திச் சங்கத் தலைவர் என்ற வகையில் நான் நினைவு கூருகின்றேன். குறிப்பாக இளைஞர், யுவதிகளின் தொழில்சார் பயிற்சி நெறிகளை ஊக்குவித்தவர். பெண்களைத் தலைமையாகக் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரியாலை 86ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா செயற்குழு உறுப்பினர்களுடன் கலைத்துறை உபதலைவராக அமரர்



அரியாலை அபிவிருத்திச் சங்க ஏற்பாட்டில் தரம் 10 – 13 புலமைப்பரிசில் திட்ட அங்குரார்ப்பண வைபவ விழாவின் போது (29.03.2008) திட்டத்தை அமுல்படுத்தியவர் என்ற ரீதியில் அமரர் உரை நிகழ்த்திய போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத் தலைவர்கள் பலர், தாம் விரும்பிய தும்புக் கைத்தொழில் பயிற்சியை வழங்குவதற்கு அயராது உழைத்தவர். சங்கத்தின் கல்வித்துறை முயற்சிகளுக்கு அவரளித்த ஊக்குவிக்கும் செயற்பாடுகள் என்றுமே சங்க நிர்வாகத்தின் வரவேற்பைப் பெற்றன. இந்தவகையில் 1998 ஆம் ஆண்டு சங்கம் ஆரம்பித்த 'தரம் 5 இற்கான புலமைப்பரிசில் திட்டம்' மற்றும் நடப்பு 2008 ஆம் ஆண்டு சங்கம் உத்வேகத்துடன் ஆரம்பித்துள்ள 'தரம் 10 - 13 புலமைப் பரிசில் திட்டம்' ஆகிய இரண்டும் சம்பந்தமாக அமரரின் செயற்பாடுகள் மெச்சத்தக்கவை. நடப்பு வருடம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தரம் 10 - 13 புலமைப் பரிசில் திட்டத்திற்கு வித்திட்ட பெருமை அமரரைச் சாரும். கடந்த 29.03.2008 அன்று நடாத்தப்பெற்ற இத்திட்ட அங்கு ரார்ப்பண வைபவத்தின்போது, சங்க "கல்வி, சுகாதார உபகுழுத்தலைவர் தவிர்க்க முடியாத காரணங்களால் நிகழ்ச்சிக்கு வருகைதர முடியாமல் போன சந்தர்ப்பத்தில், சுகயீனமுற்றிருந்த நிலையிலும், இவ் இடைவெளியை நிரப்பி, அமரர் ஆற்றிய உரை எனது ஞாபகத்திற்கு வருகின்றது. அதுவே அமரர் அரியாலையில் பொது நிகழ்ச்சி ஒன்றில் ஆற்றிய கடைசி உரை என்பதை நினைவு கூரும்போது மனம் சஞ்சலப்படுகின்றது.

09. அடுத்து, **அரியாலை நீர்நொச்சித் தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான** நிர்வாகசபைத் தலைவர் என்ற வகையில் நான் அமரர் பஞ்சலிங்கம் அவர்களின் இறை சேவையுடனான தொடர்பையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். தேவஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கும் பார்வதி சமேத தியாகராஜப் பெருமானுக்கு ஆண்டு தோறும் நடைபெறும் அலங்கார உற்சவத்தின்போது, தனது சகோதரர்களுடன் இணைந்து அமரரின் தந்தையார் மறைந்த வல்லிபுரம் தம்பிப்பிள்ளை அவர்கள் தேர் உற்சவத்தை நடாத்தி வந்தார். 2004 ஆம் ஆண்டு நிகழ்ந்த தந்தையாரின் மறைவுக்குப் பின் அமரர் த. பஞ்சலிங்கம் அந்தப் பொறுப்பை ஏற்று செயற்பட்டு வந்தார். அமரரின் சிறிய தந்தையாகிய மறைந்த வல்லிபுரம் தர்மலிங்கம் அவர் களின் கைவண்ணத்தினால் உருப்பெற்ற அந்த இரதத்தைப் பாதுகாப்பாக நிறுத்தி வைத்திருக்க வேண்டும் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உந்துதலினால் தேர் உபயகாரர் என்ற வகையில் ஓர் நிரந்தர தேர்முட்டியை அவசியம் விரைவில் கட்டியாக வேண்டும் என்றும் அதற்கான நிதி சேகரிப்பு முயற்சியில் தான் முழுமனதுடன் இறங்கவுள்ளதாகவும் அண்மையில் கருத்துத் தெரிவித்த அமரர் தேவஸ்தான நிர்வாகத்தின் பங்களிப்பையும் கோரியது என் ஞாபகத்திற்கு வருகின்றது. ஆயினும் அம்முயற்சி ஆரம்பிக்க முன்பே தனது பூவுலக வாழ்வை முடித்து இறைவனடி சேர நேர்ந்ததை எண்ணி என் மனம் அங்கலாய்க்கின்றது.

10. **தொழில் வாழ்க்கையில்** ஆசிரியராய், அதிபராய், கல்விப் பணிப்பாளராய் கல்வித் திணைக்களத்தில் பரிணாம வளர்ச்சி கண்ட கல்வியாளன். யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி) என்ற கோதாவில் அரியாலையில் இயங்கும் முன்பள்ளிகள் சிலவற்றிற்கு தளபாட மற்றும் கற்றல் உபகரண வசதிகளைப் பெருக்குவதற்கு அண்மையில் ஆவன செய்தமை நினைவு கூரப்பட வேண்டியது. அத்தோடு நடப்பு வருடம் ஏனைய முன்பள்ளிகளுக்கும் இத்தகைய சேவையை செய்வதற்கு முயற்சிசெய்து கொண்டிருந்ததை நான் அறிவேன்.

11. இறுதியாக, பொது அமைப்புக்கள் சம்பந்தமாக **அரியாலை சித்துப்பாத்தி இந்து மயான சபையுடனான** அமரரின் தொடர்பையும் ஈண்டு குறிப்பிடுவது அவசியமாகும். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் இவ் மயான அபிவிருத்திக்கு அண்மையில் கணிசமான நிதியுதவியைப் பெற்றுத் தந்த அமரரின் சேவையையும் இங்கே குறிப்பிடுவது சாலவும் பொருத்தமானது.

12. **அரியாலைப் பொது அமைப்புகளினுடனான** அமரரின் தொடர்பைப்பற்றி இத்துடன் முடித்துக்கொண்டு எம் இருவரிடையேயும் இருந்த தொடர்பு பற்றி சில வரிகள் சேர்ப்பது அவசியம் என்று கருதித் தொடர்கின்றேன். 06.04.2008 அன்று அமரரின் நினைவாக அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்குவதற்கு எனக்குக் கிடைத்த வாய்ப்பை பெரும் கௌரவமாக நான் கருதுகின்றேன். அன்று எனது தொடக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையில் கூறியது போல அமரர் அவர்கள் என்னிலும் பார்க்க 16 வருடங்கள் வயதில் இளையவராக இருந்தாலும் அவரின் செயற்பாடுகளினால் தன்னை உயர்த்தி வயது வேறுபாட்டை மறந்து நாம் இணைந்து செயற்பட வைத்த பெருமை அமரரைச் சார்ந்ததாகும்.

நாம் இருவரும் தினமும் நேரிலோ, தொலைபேசி மூலமோ தொடர்பு கொண்டிருந்தோம். எமது தொடர்பாடல்கள் பெரும் பாலும் எமது ஊரின் சிறப்பை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் சம்பந்தமாகவே அமைந்திருந்தன. பரஸ்பரம் சுகமறிந்து கொள்வதும் அண்மையில் தினமும் இடம்பெற்றது.

காரணம், அண்மைக் காலமாக அமரர் தனது உடல் நலத்தைப் பேணாது **மக்கள் சேவை, திணைக்கள சேவை** என அலைந்து திரிந்தமையினால் ஏற்பட்ட எனது மனக் கவலையை அமரருடனும் அவரது பாரியாருடனும் அவர்கள் வீட்டில் பல தடவைகள் பகிர்ந்துள்ளேன்.

இறைவன் தனக்கு இசைவானவர்களைத் தன்பால் இழுப் பவர் என நாம் சிந்திப்போமாயின் அமரரின் மறைவை இறைவனின் அனுக்கிரகத்தின் மேல் இறைவனே அமரரை ஆட் கொண்ட செயலாகக் கருதி நாம் அனைவரும் மன ஆறுதல் அடைவதே பொருத்தமானதாகும்.

**'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்**
**கருமமே கட்டளைக் கல்'**

என்ற வள்ளுவர் பெருந்தகையின் வரிகளை நினைவு கூர்ந்து அன்னாரின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கும் மற்றும் உற்றார் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு பெருமையுடைய ஓர் உத்தம புருசனின் ஆத்மா சாந்தியடைய இறைவனை யாசித்து நிறைவு செய்கின்றேன்.

169, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

நண்பன்
S.T. பத்மநாதன்,
சமாதான நீதிவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகக் கலைஞன் பஞ்சலிங்கம்

கல்வியொடு கலை, விளையாட்டு, அரசியல், கூட்டுறவு, சமூகப்பணி ஆகியவற்றில் மேலோங்கி நிற்கும் பெருங்கிராமம் அரியாலை என்பது யாவரும் அறிந்ததே.

அரியாலையூர் அமரர் த. பஞ்சலிங்கம் தனது இளமைக் காலத்தைக் கல்லூரி வாழ்க்கையுடன், அரியாலை சனசமூக நிலையத்துடன் இணைந்து கலைத்துறை மற்றும் சமூகப் பணிகளில் ஈடுபாடுகொண்டு செயலாற்றி வந்தார்.

நிலைய இல்லகலைப் போட்டிகளிலும் நாடகப் போட்டிகளிலும் பங்குபற்றித் தனது திறமையையும், ஆளுமையையும் வளர்த்து, பின் நிலைய நிர்வாகத்தின் முதன்மைப் பதவிகளை வகித்து, அதன் தலைவராகவும் உயர்ந்து சேவையாற்றியமை இங்கு குறிப்பிடத்தக்கது. இவரது சேவையால் நிலையம் பல வழிகளிலும் வளர்ச்சி பெற்றது.


நிலைய ஆண்டு விழா, சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா நாடகங்களிலும் பங்குபற்றித் தன்னை ஒரு முதிர்ந்த, அரங்க அனுபவம் பெற்ற நடிகராக வளர்த்துக் கொண்டார். கடந்த மூன்று தசாப்தங்களாக அமரர் பஞ்சலிங்கம் பங்குபெறாத, எந்த ஒரு விழாவும் அரியாலையில் நடைபெறவில்லை. தலைவராக, செயலராக, நடிகராக, ஒழுங்கமைப்பாளராக, அறிவிப்பாளராக நடுவராக இவர் செயலாற்றினார்.

**நாடகப் பணி:**

அரியாலை சனசமூக நிலைய இல்ல நாடகப் போட்டிகளில் பல வருடங்களாக அமரர் பொ. விஜயரத்தினத்துடன் இணைந்து நல்ல நாடகங்களை மேடையேற்றி பரிசும் பெற்றிருக்கின்றார். இதில் குறிப்பிடத்தக்கது **'பரசுராமன்'** நாடகம். இந்நாடகத்தில் தந்தையின் ஆணை கேட்டு தாயின் தலையைக் கொய்து வந்த பரசுராமன் பாத்திரத்தில் உணர்ச்சிகரமாக நடிப்பை வெளிப் படுத்தியது இன்னும் என் மனதில் நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அரியாலை 75வது சுதேசியதின கொண்டாட்ட விழாவில் (14.04.1994)
இடம்பெற்ற "எல்லாளன்" சரித்திர நாடகத்தில் அமரர் "பாலமதன்"
பாத்திரமேற்று நடித்த காட்சி



அரியாலை 74வது சுதேசியதின கொண்டாட்ட விழாவில் (1993ம் ஆண்டு)
நடைபெற்ற வரலாற்று நாடகமான இராஜராஜ சோழனில்
"பாலதேவர்" பாத்திரத்தில் அமரர் தோன்றிய காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்/இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் 1977 ஆம் ஆண்டு
அரங்கேறிய "நல்லைநகர் நாவலர்" நாடகத்தில்
பங்குபற்றிய நடிகர்களுடன் அமரர்



அரியாலை சனசமூக நிலையத்தின் 30 ஆவது ஆண்டு விழாவில் (12.07.1980)
மேடையேறிய ஸ்ரீஸ்கந்தனின் "அயஸ்வர கீதம்" எனும் புரட்சி நாடகத்தில்
நடிகர் குழாமுடன் அமரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து பல நாடகங்களிலும் பிரதம பாத்திரங்களிலும் நடித்து மக்கள் மனதில் நீங்கா இடம்பிடித்துக் கொண்டார். இதில் குறிப்பிடக்கூடிய நாடகங்கள் சில.

**'ராஜநாகம்'**, 1979இல் **'மனோகரா'**
**'ராட்சசன்'**, ப. ஸ்ரீஸ்கந்தனின் **'அபஸ்வரகீதம்'** (1980)
**'ஆத்மாவின் ராகம்'** (1981), ந. கிருஷ்ணசிங்கத்தின்
**வீடுகள் விழிக்கின்றன'**

அமரர் பஞ்சலிங்கம் தனது கலைப்பயணத்தை விரிவுபடுத்தி யாழ் மாவட்டத்தில் பல முன்னணி அமைப்புகளுடன் இணைந்து நாடகங்களில் நடித்துள்ளார்.

**'நல்லைநகர் நாவலர்'**

நாவலர் பற்றிய நூல் வெளியீட்டு விழாவில் யாழ் இந்துக் கல்லூரியில் 1977இல் மேடையேறியது. அரியாலையூர் அமரர் சதாசிவம் ஆசிரியர் தயாரித்திருந்தார். இந் நாடகத்தில் அமரர் **'பீற்றர் பிள்ளை'** என்ற பாத்திரத்தில் நடித்திருந்தார்.

**'தெய்வப் பாவை'** யாழ் சேக்கிழார் மன்ற தயாரிப்பில் அமரர் மூதறிஞர் சொக்கனால் தயாரிக்கப்பட்டது. S. T அரசு அவர்களால் நெறியாற்கையில் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் 1979 இல் மேடையேறியது. இதில் அமரர் சமணமத 2 ஆவது தலைவர் **'மல்லிசேனர்'** என்ற பாத்திரத்தில் நடித்திருந்தார். என்னையும் இவ் வட்டத்திற்கு இணைத்து அரசன் நின்றசீர் நெடுமாறனாக நடிக்க வாய்ப்பு வழங்கிய பெருமை பஞ்சுவுக்கே.

**'ஒதெல்லோ'** நீர்ப்பாசன திணைக்கள அனுசரணையுடன் வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேறிய ஷேக்ஸ்பியரின் **'ஒதெல்லோ'** நாடகத்தில் பிரதம வில்லன் **'இயாகோ'** பாத்திரத்தில் நடித்து, பாராட்டுதலைப் பெற்றார்.

மேலும் அமரர் நந்தியின் **'குரங்குகள்'** என்ற மனோதத்துவ நாடகத்திலும் நடித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் பஞ்சலிங்கம் நடித்த அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் புகழ்பெற்ற நாடகங்கள் சில:

**'இராஜராஜ சோழன்'** - *-1993-* — *74ஆவது சு.தி.கொ. விழாவில் மேடையேறிய மிகப் பிரமாண்டமான தயாரிப்பு அமரர் S. T. கணநாதன் நெறிப்படுத்தியிருந்தார். 4½ மணிநேரம் மக்கள் தொடர்ந்து இருந்து பார்த்த நாடகம் என புகழப்பட்டது.* **'பாலதேவர்'** *என்ற வில்லத்தனமான பாத்திரத்தில் பஞ்சு நிறைவாக நடித்திருந்தார்.*

**'எல்லாளன்'** - *-1994-* — *விழாவின் 75 ஆவது பவள விழாவிற்காக மேடையேற்றப்பட்டது. பஞ்சு* **'பாலதேவன்'** *என்ற பாத்திரத்தில் நடித்திருந்தார். காசிப்பிள்ளை அரங்கில் மேடையேறியது. ஏகோபித்த பாராட்டுதலைப் பெற்றது.*

**'இலங்கேஸ்வரன்'** - *-1995-* — *விழாவின் 76 ஆவது வருட விழாவில் மேடையேறியது நெறியாள்கை அமரர் S.T கணநாதன் "இலக்குவன்" பாத்திரத்தில் நன்றாகவே நடித்திருந்தார்.*

**கலாமன்றம்:**

*அரியாலையூர். நாடக கலைஞர்களை ஒருங்கிணைத்து. கலாமன்றம் அமைக்கும் வேலைத் திட்டத்தில் எம்மோடு தோள் கொடுத்து செயற்பட்டதோடு இசைநாடகப் பயிற்சி வழங்குவதிலும். உள்ளூர் இசைநாடக மேதைகள் அமரர் V. K. இரத்தினம். செல்வம் போன்றோரையும். வரவழைத்து எம் போன்றோருக்கும் இளைய சந்ததியினருக்கும் பயிற்சி வழங்கினார். நாட்டு சூழ்நிலையால் அது நிறைவு பெறாமல் போயிற்று.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டு விஜயங்களின் போது அமரர் தனது நடிப்புத் திறமையை வெளிக்காட்டிய போது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞர்களின் இன்ப நிகழ்வுகளிற்கு சமூகம் கொடுத்து வரவேற்பு நிகழ்ச்சி நடாத்துவதிலும் துன்ப நிகழ்வுகளில் அஞ்சலி நிகழ்ச்சி நடாத்துவதிலும் அமரர் பஞ்சுவே முன்னின்று இது வரை காலமும் நடாத்திவந்தார்.

நாடகத்துறையிலும், எமது பெருங் கிராமத்திலும் மிகவும் பற்றுக்கொண்ட பஞ்சலிங்கம், இவ்வளவு விரைவில் எம்மை விட்டுப் பிரிவார் என்று யாருமே நினைத்துப் பார்க்கவில்லை.

1997 ஆம் ஆண்டில் முக்கிய அதிகாரி முன்னிலையில் நடை பெற்ற ஒரு கலந்துரையாடலில் எல்லோரும் மௌனம் காத்த வேளையில் அமரர் பஞ்சலிங்கம் தான்சார்ந்த தொழில்சங்க மகஜரைக் கையளித்து ஆங்கிலத்தில் விளக்கமளித்தது அவரின் திறமையையும் துணிச்சலையும் எண்ணி பலரையும் வியப்பில் ஆழ்த்தியது இன்னும் என் மனக்கண்ணில் நிற்கின்றது.

பல்துறை ஆளுமை கொண்ட பஞ்சுவின் திடீர் மறைவு, அவரது குடும்பத்தினருக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த ஈழத் தமிழருக்கே பேரிழப்பாகும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நீர்நொச்சித் தாழ்வு சித்தி விநாயகரை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!!

அரியாலை, புலோலி.

**ச. உருத்திரேஸ்வரன்.** (B.A)
அரியாலை கலாமன்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்றிறன் மிக்க அதிபர்

கல்விப் புலத்தின் கலங்கரை விளக்காக மிளிர்ந்த அமரர் தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கம் அவர்களின் இழப்பு ஈடுசெய்து கொள்ளமுடியாத பேரிழப்பாகும்.

தன்னுடைய விடாமுயற்சியினாலும் செயற்றிறனாலும் பல அளப்பெரிய பணிகளை இவர் கல்விச் சமூகத்திற்கு ஆற்றியுள்ளார். இந்தவகையில் அமரர் பஞ்சலிங்கம் அவர்கள் தான் முதன்முதலாக அதிபர் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட யா / நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையிற்குத் தன்னுடைய காலப்பகுதியிலும் சரி, பின்னரும் சரி பல்வேறு சேவைகளை ஆற்றியுள்ளார்.

அமரர் பஞ்சலிங்கம் அவர்கள் எமது பாடசாலையில் பணியாற்றிய காலத்தில் பாடசாலையில் காணப்பட்ட பல்வேறு தேவைகளை நிறைவேற்றியுள்ளார்.

ஆசிரிய வளம், பௌதிகவளம், போன்றவற்றை போதுமான அளவிற்கு தன்னுடைய காலப்பகுதியில் இவர் எமது பாடசாலையிற்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

இவருடைய பணிக் காலத்திலேயே எமது பாடசாலை கோட்ட மட்ட, வலயமட்ட போட்டிகளில் பங்குபற்றி பல வெற்றிகளைப் பெற்றுள்ளது.

அமரர் பஞ்சலிங்கம் அவர்கள் பண்பில் உயர்ந்தவர். தன்னுடன் பணியாற்றிய மூத்த ஆசிரியர்கள் மீது பணிவும் உயர்ந்த மதிப்பும் உடையவராக இவர் திகழ்ந்துள்ளார்.

சகல ஆசிரியர்களையும் ஒன்றிணைத்து பாடசாலையின் வளர்ச்சிக்காகப் பெரிதும் பாடுபட்டார். எவரையும் மனம் நோகவிடாது அன்போடு ஆதரிக்கும் பண்புள்ளங் கொண்டவராக இவர் திகழ்ந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் அவர்கள் மாணவர்களை அன்போடு வழிப்படுத் தக்கூடிய ஆற்றல் படைத்தவராகவும் விளங்கினார். பொறுமையும் தன்னம்பிக்கையும் கொண்ட அதிபராகத் திகழ்ந்த அமரர் அவர்கள் பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற் றுச் சென்றபோது எமது பாடசாலைச் சமூகம் பெருமை யடைந்தது.

தன்னுடைய பணிக் காலத்தில் சிறந்த சேவையாற்றிய அமரர் பஞ்சலிங்கம் அவர்களின் இழப்பு எமக்கு பேரிழப் பாகும். அமரர் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னா ரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அமரர் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்ளுகின்றோம்.

ஓம் சாந்தி!

நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

**பாடசாலைச் சமூகம்,**
யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி
வித்தியாசாலை.

கூத்தாட்டு அவைகுழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று.

குடம்பை தனித்துஒழியப் புள்பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கம் அவர்களை நாம் பிரிந்திடவில்லை

எத்தனை வேலைப்பழுக்கள் இருந்தாலும்
அத்தனையும் முடித்துவிட்டு எம் மூவரையும்
மாலையில் சந்தித்து விடுவீரே'
பலருக்கு உமது சிரிப்பைப் பார்க்க ஆசை.
ஆனால் உம் சிரிப்பை தினமும் நாம்
ரசிப்போம்.
இடர்வரும் காலங்கள் எல்லாம் எந்த
இடருமே எமக்குத் தெரியாமல் துயர்
துடைத்த உத்தமரே' உண்பதிலும்
சரி, உடுப்பதிலும் சரி எமக்குத் தராமல்
விட்டது கிடையாது.
ஒரு கணம் நண்பனாக இருப்பாய்'
மறுகணம் அதிகாரியாய் தொழிற்படுவாய்'
நடிகனாய் தோன்றும் உன் தோற்றம் கண்டு
நாமேவியந்து நகைத்துப் பேசியதுண்டு
சதா என்பாய், செல்வா என்பாய்
சரா என்பாய் இவையெல்லாம் உன்
அன்புப் பாஷைகள். எதை நினைப்பது,
எதை மறப்பது, எம்மோடு இருப்பதுபோல்
இருக்கிறதே. நீண்டதூரம் சென்று
விட்ட உன் முகத்தோற்றம்
நாம் வாழும்வரை நிலைத்திருக்கும்.

என்றும் உரிமையுடன்
*சி. சதாசிவம், S.C செல்வராசா,*
*சரா. புவனேஸ்வரன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நினைவில் சில துளிகள்....

அமரர் அவர்களைப் பற்றி என் நினைவில் இருந்து சில துளிகளைப் பதிவுசெய்வதில் பெருமை அடைகிறேன்.

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் அவர் அதிபராகக் கடமையாற்றினார்.

1991ஆம் ஆண்டு அவர் அதிபர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். நானும் 1991ஆம் ஆண்டு அப்பாடசாலையில் ஆசிரியராக இணைந்துகொண்டேன். அவர் வயதில் குறைந்த வராக இருந்தாலும் அவரின் கீழ்க் கடமை ஆற்றிய காலத்தை நினைத்துப் பார்க்கிறேன்.

என்னுடைய 37 வருட ஆசிரிய சேவையில் அமரர் பஞ்சலிங்கம் அதிபருடன் சேவையாற்றிய காலம் மிகவும் மகிழ்ச்சி நிறைந்ததாக இருந்தது.

காரணம் அவர் ஆசிரியர்களிடையே ஒற்றுமையை நிலை நாட்டினார். அந்நாட்களில் எங்களிடையே இருந்த ஐக்கியத்தைப் பார்த்து அயற் பாடசாலைகளில் கடமை ஆற்றிய ஆசிரியர்கள் வியந்ததுண்டு.

விளையாட்டுப் போட்டி நடைபெறும் காலங்களில் மாத்திரம் ஆசிரியர்களிடையே போட்டி ஏற்படும். அதிபரிடம் முறைப்பாடு செய்யச் செல்வோம். அதிபர் புன்சிரிப்புடன் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு இருப்பார்.

அதிபர் அவர்கள் ஒற்றுமையைப் பேணியதன் காரணத்தைப் பின்பு தான் உணரக்கூடியதாக இருந்தது.

தன்னுடைய குடும்ப உறவுகளைப் பேணிப் பாதுகாப்பதில் மிகவும் திறமைசாலியாக இருந்தார்.

1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வின்போது நாங்கள் வடமராட்சியில் இருந்தோம்.

அவர் நெல்லியடி மகளிர் கல்லூரியில் இருந்தார். ஒரு நாள் அதிபரைப் பார்க்கச் சென்றபோது அங்கு குடும்பங்கள் எல்லோரும் சேர்ந்து ஒற்றுமையாகச் சமைத்துக்கொண்டு இருந்தார்கள். அந்தக் காட்சியைக் காணும்போது எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் ஆசிரியர்களை ஒருபோதும் சினந்து பேசமாட்டார். மூத்த ஆசிரியர்களை மரியாதையோடு பண்பாக நடத்துவார்.

நாங்கள் எங்களுடைய கருமங்களைச் சரியாகச் செய்வோம். மற்றக்கருமங்களை அதிபர் பார்த்துக்கொள்ளுவார் என்ற நம்பிக்கையுடன் இருந்தோம்.

அவருடைய அதிபர் சேவைக்காலத்தில் பல மாணவர்கள் 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். அவர்களில் ஒரு மாணவன் பொறியியலாளராகத் தொழில் செய்கிறார்.

மெல்லக்கற்கும் மாணவர்களுக்காகப் பாடசாலை முடிந் ததும் கற்பித்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சென்றார். "ரீச்சர்" அதற்கேற்ற நேரசூசியைப் போடுங்கள் என்று என்னிடம் கூறுவார்.

ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிக்குக் கல்விதான் ஆணிவேராக இருந்து உயர்த்துகிறது என்பதை அதிபர் அவர்கள் சொல்லிலும் செயலிலும் வெளிப்படுத்தினார்.

பாடசாலைச் சேவையை விட்டுத் தொலைக்கல்விப் போதனாசிரியராகச் சென்றபோது 'ஏன் சேர்' பாடசாலையை விட்டுச் செல்கிறீர்கள் என நான் கேட்டேன்.

அவர் கூறிய பதில், "ரீச்சர்" நான் பாடசாலையில் இருந்து கொண்டு ஆசிரியர்களுக்காகக் குரல்கொடுக்க முடியாது என்றார்.

அவர் தனது இறுதிக் காலம்வரை ஆசிரியர்களுக்காகக் குரல்கொடுத்துக் கொண்டிருந்தார். அவரின் பிரிவு ஆசிரிய சமூகத்துக்கு மாத்திரம் அல்ல கல்விச் சமூகத்துக்கே பேரிழப் பாகும்.

அவரின் ஆத்துமா சாந்தியடையவும் அவரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கும் ஆறுதல் கொடுக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**திருமதி ந. பேரம்பலம்**
ஓய்வுபெற்ற ஆசிரியர்
யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சலிங்கத்துக்கு அஞ்சலி!

பஞ்சலிங்கத்துக்கு அஞ்சலி !
நெஞ்சு வலிக்குது!
பஞ்சு பறந்து போச்சு !
நெஞ்சு கொதிக்குது !
அமரர் என்று சொல்ல அடிவயிறு எரியுது !
பஞ்சலிங்கம் ! .... நீ செத்துப் போனாய் என்பது -
சுத்தப்பொய் ! நம்பமுடியவில்லை என்னால் !
ஐம்பத்து ஏழு வயதுதானே உனக்கு ! அதற்குள்
ஏன் இந்த அவசரம்! ஏற்கமுடியவில்லையே!
குறைந்தது ! அறுபது மட்டுமாவது இருக்க !
என்ன முட்டு வந்ததுனக்கு !
அகவை அறுபதென்று ! உவகை செய்திருப்போமே !
அந்த ! வைரவர் வாசலில் வந்திறங்கி !
வழிபட்டுப் போவது ! என் விழிக்குள் நிக்குது !
இந்த மண்ணை விட்டுப்போகும் உன் வைராக்கியம்
அந்த வைரவராலும் ! தடுக்க ஏலாது போயிற்று!
சந்தனப் பொட்டிட்டு நீ சந்தி கடப்பதை !
இந்தச் சந்ததி மறக்காது !
உன் சந்ததி எல்லாம் உனை ராசா என்றழைத்தார்!
அவர்க்கு அரசனாய் இருந்து ! அவலங்கள் தீர்த்தாய் !
இன்றுனக்கு அஞ்சலி செலுத்த நீ ஆகுதியானாய் !
நெஞ்சு வெடிக்குது நினைக்க !
குஞ்சு ! குழந்தை எல்லாம் ! குளறித் தவிக்குது !
பஞ்சு ! நீ எழுந்தொருக்கா - உன்
பிஞ்சு முகத்தைக் காட்டிடு !
கவிஞனாய்! கலைஞனாய் ! கல்விமானாய் !
நடிகனாய் ! நற்பண்பாளனாய் !
நாடுபோற்ற வாழ்ந்ததை ! இன்று உன் ஊர் - போற்றுது.
அரியாலையின் அரும்பொருள் நீ !
கலைமகளின் கலைச்சொத்து நீ !
விலைமதிக்க முடியாத உன்வீச்சு!
மூச்சற்றுப் போச்சு !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்முழுதும் உன் சோகம் ! நீர் அற்றுப் போச்சு !
யாருக்குச் சொல்லி அழ!
இப்படி நெருக்கம் வரும் என்று ! நான் சொர்ப்பனமும்
காணவில்லை !
உன் முத்துக்கள் மூன்று! கத்திக் குளறுது !
கண்திறந் தொருக்காப் பார்த்துவிடு!
கடைசி முத்தத்தைக் கொடுத்து விடு !
கைப்பிடித்தவள்! கால்மாட்டில் கதறுகிறாள் !
மார்மேல் குத்தி புரளுகிறாள் ! அவளுக்கொரு
பரிவுரை கூறிவிடு !
உடன்பிறப்பெல்லாம் ! உருண்டு புரழுகிறார் !
ஊண்டி ஒருக்கா ஓதிவிடு !
சுற்றத்தார் எல்லாம் ! சுற்றி நிற்கிறார் ! உன் பற்றில் -
பரதவிக்கிறார் ! பார்த்தொருக்கா ! உன் பற்களைப் பாச்சிவிடு
ஏன் இந்த வறட்டுக் கௌரவம் ! உனக்கு !
பட்டுடுத்தி ! பொட்டிட்டு ! பெட்டியில் வைத்துன்னை
கட்டி அழ என்னமுட்டு வந்ததெமக்கு !
சித்துப்பாத்திக்கு போக நேரமாச்சு ! கட்டை அடுக்கியாச்சு!
கொள்ளிக்குடம் தூக்கியாச்சு பூவுடலைப் பொசுக்கி
அழிக்க நேரமாச்சு ! தடுக்க யாருமில்லை ! முடிவு இதுதான் !
வீடுவரை உறவு ! வீதிவரை மனைவி ! காடுவரை பிள்ளை!
கடைசிவரை யாரோ!
இனி எட்டுச் செலவு ! அந்தியேட்டி அழைப்பு !
ஆண்டுத் திவச நினைவு ! இது காலத்து நியதி !
நிம்மதியாய் தூங்கு ! நிலம் வெழுத்துப் போச்சு !
கத்திக்குளறத்தான் எம்மால் முடியும் ! உன் காலடிக்கு !
வரமுடியாது ! வரும்நாளில் சந்திப்போம் !
என் நெஞ்சு நிறைந்த அஞ்சலியைத் தந்தேன்!
நிம்மதியாய்த் தூங்கு !

நன்றி.

*(இறுதி அஞ்சலி நிகழ்வில் இடம்பெற்ற கவிதை)*

ஆக்கியோன்
மரபுக் கலைச்சுடர்
இ. கனகரத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர் அன்புக்கு உதாரணமாய் விளங்கிய
எமது ஊரின் ஏற்றமிகு கல்வியாளர்

# அமரர் தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கம்

யாழ் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின்
சிரேஸ்ட துணைப் பொதுச் செயலாளர், சமூக சேவகர், கலைஞர் முதலான
பெருமைக்குரிய பதவிகளில் அமர்ந்து பரந்த சேவை புரிந்த பெரியாரை இழந்துள்ளோம்.

தாங்கு தமிழ் உணர்வு, பாங்கு மிகு தேசபக்தி
தேங்கிய யாழ் அரியாலை ஊர் தன்னில் நல்
ஓங்கு கல்விப் பண்பாட்டுக் குடும்பத்தில் பிறந்து,
பெரும் கல்வியற் சேவையில் சிறந்து துலங்கி,
வளங்கொண்ட சமூகசேவையில் உலகம் அறிய
விளங்கிய இனிய நண்பரை இழந்துவிட்டோம்!
மகிழ்ந்து பெருமை மிக தாயகத்தைப் பற்றியே,
வாழ்ந்த கல்விமான், இவர் இன்று இல்லையே!

தன் அடக்க மவுனமும், திறனார்ந்த சிந்தனையும்
உம் இடமிருந்து நாங்கள் கற்றுக் கொண்டவை!
வாழ்வின் விழுமியங்களை விளங்கிக் கொள்ளவே
தேடல்களைத் தொடரவேண்டிய நூல் வாசிப்பும்
இன்னிசையை இரசிக்கும் நல்மெல்லினிய மனமும்,
நகைச்சுவையை விரும்பி, உரையாடும் சிறப்பும்
கொண்ட, நாடகக் கலைஞர், உம்மோடு சேர்ந்து
நாம்நடித்த புகழ் நாடகங்களை நினைக்கின்றோம்!

இல்லறமே இவ்வுலகின் நல்லறம் மற்றும் ஏனை
எல்லாம் அதுபோலச் சிறந்ததன்று என்ற சொற்
கிழத்தி அவ்வையின் வாக்கிற்கேற்பவே வாழ்ந்து,
துணைவி, சுற்றம், பிள்ளைச் செல்வங்களோடு,
அன்பு பெருக்கியே இல்லறம் காத்த வல்லவராக,
புகழோடு, வலுநல்ல மனிதரென்ற நாமத்தோடுநீர்
வாழ்ந்தவாழ்வு நீண்ட நினைவாக நெஞ்சங்களில்
நிலைத்து இருக்க , உமது ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திப்போம்!!!

இவ்வண்ணம்
நோர்வே நண்பர்களோடு
ந. கிருஷ்ணசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறநாட்டிலிருந்து வந்த இரங்கல் செய்தி

அரியாலை மக்களின் மேம்பாட்டிற்காக உழைத்த நல்லுள்ளம் படைத்த ஒருவரை இன்று நாம் இழந்து நிற்கின்றோம்.

பஞ்சலிங்கம் மாஸ்ரர் அவர்கள் எங்கள் மக்களின் கல்வி, கலை, வளர்ச்சியில் அதிக ஆர்வம் கொண்டிருந்தார்.

மென்மையாகவும் தன்மையாகவும் அனைவருடனும் பழகும் பண்பைக் கொண்டவர்.

நாடகத்துறையில் அதீத காதல் கொண்ட அவர் ஆத்மாவின் 'ராகம்' நாடகத்தில் ஏற்ற சங்கீதவித்துவான் பாத்திரம் எவராலும் மறக்கமுடியாததொன்று.

அவரின் ஆத்மசாந்தி வேண்டியும் அவரின் குடும்பத்தினரின் ஆறுதல் வேண்டியும் இறைவனை யாசித்து நிற்கும்

'அரியாலை ஒன்றியம்'
கனடா

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அரியாலை 85வது (2004ம் ஆண்டு) சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவில் அமரருக்கு
சிறந்த கலைச் சேவைக்கான விருது கிடைக்கப்பெற்றபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் கல்விக் கழகத்தின் அஞ்சலி

காலத்தால் அழியாத, தீயினால் அழியாத, நீரினால் அழியாத அரும்பெரும் பொக்கிஷமான கல்விச் செல்வத்தை அள்ளி வழங்கும் எமது முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. பஞ்சலிங்கம் அவர்களது திடீர்மறைவு எமக்கு அதிர்ச்சியைத் தந்தது. என்னால் நம்பவே முடியவில்லை. இது பொய்யாக இருக்கக் கூடாதா என ஒரு கணம் என் மனம் அலை பாய்ந்தது.

எடுத்த விடயத்தைச் சுற்றி வளைக்காமல் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் ஆற்றல் பஞ்சலிங்கத்துக்கு உண்டு.

பாலர் கல்விக் கழகத் தலைவர் என்ற ரீதியில் அவரது அறிவாற்றலை நேரில் பார்த்திருக்கின்றேன். கொண்ட கொள் கையை அப்படியே நிறைவேற்றும் உத்தம குணம் படைத்த ஒரு வரை நாம் இழந்துவிட்டோம்.

இது ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்.

முன்பள்ளி ஆசிரியைகளும் முன்பள்ளிப் பாலர்களும் இவரது நீண்டநாள் சேவையைப் பெற்று நல்ல நிலையை அடைவதற்கு வாய்ப்பை இழந்து நிற்கின்றனர். நாம் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். என் செய்வோம்?

பாலர் ஆசிரியைகளின் பக்குவமான சேவையைப் பாராட்டி வாழ்த்திப் பேசிய பஞ்சலிங்கம் இன்று இல்லை என்பதை எண்ணும்போது நெஞ்சம் புண்ணாகி ரணமாக வலிக்கின்றது.

எமது கழகத்தின் சேவையின் பெறுபேறுகளை என் முன்னாலேயே பாராட்டிப் பேசியவர் அமரர் பஞ்சலிங்கம். அவரது இழப்பு எமக்குப் பெருத்த மனவேதனையைத் தருகிறது.

அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அமரரின் ஆத்மா வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமானின் திவ்ய பேரருட் கருணையில் திளைத்திருக்கப் பிரார்த்திக்கின்றேன்.

**இராசையா ஸ்ரீதரன்**
தலைவர்,
பாலர் கல்விக் கழகம், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் நிறைந்தவர்

அரியாலையூரின் சிறப்பிற்கும் மேன்மைக்கும் காரணமாக மிளிர்ந்தவர்களுள் அமரர் பஞ்சலிங்கம் அவர்களும் ஒருவராக திகழ்ந்துள்ளார்.

அமரர் அவர்கள் தான் சார்ந்த ஊரில் உள்ள அனைத்து சமூக நிறுவனங்களினதும் வளர்ச்சியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு அவற்றிற்குத் தன்னாலான உதவிகளைச் செய்து வந்துள்ளார். அந்தவகையில் எமது அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம் சார்ந்த முன்பள்ளியின் வளர்ச்சியில் அவருடைய பங்களிப்பு அளப்பெரியது.

எமது நிலையத்தின் முன்பள்ளிப் பிள்ளைகளுக்கான கற்றல் உபகரணங்களையும் மற்றும் விளையாட்டு உபகரணங்களையும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் அமரர் அவர்கள் பெற்றுத் தந்துள்ளார். அத்துடன் அவ்வப்போது முன்பள் ளிக்கு விஜயம் செய்து அதன் குறைபாடுகளைக் கேட்டறிந்து அவற்றை உடனுக்குடன் நிறைவுசெய்து வந்தார்.

அமரர் பஞ்சலிங்கம் அவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றி இன்று பலர் அவருடைய வழியில் செல்வதற்கு இவர் காரணகர்த் தாவாக மிளிர்ந்துள்ளார்.

அமரர் பஞ்சலிங்கம் அவர்களுடைய பிரிவு எம்மைப் பொறுத்தளவில் தாங்கிக்கொள்ள முடியாத பேரிழப்பு ஆகும்.

அன்னாரின் பிரிவாற் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், கல்விச் சமூகத்திற்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரி வித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்ளுகின்றோம்.

**இ. மதிகரன்**
தலைவர்,
ஸ்ரீ கலைமகள் ச.ச நிலையம்,

அரியாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளந்தாளர் அஞ்சலி

தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கம் அவர்கள் காலமாகி விட்டார் எனக் கேள்வியுற்றதும் அநேகர் அதிர்ச்சியுற்றார்கள். அதிர்ச்சி எனக்கு இருமடங்காகியது. இவரது இழப்பு ஏனையோருக்கு தொழிற்சங்கரீதியான, சமூகசேவையான இழப்பாகும்.

ஆனால் அமரர் பஞ்சலிங்கத்தின் மறைவு திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீமுத்து மாரியம்மனின் திருக்குளிர்த்தியினருக்கும் வளர்ந்துச் சமூகத்திற்கும் ஏற்பட்டுள்ள பேரிழப்பாகிவிட்டது.

மிகப் பெருங்காலமாக வளர்ந்தாளராகிய திருநெல்வேலி வைத்திலிங்கம் பொன்னையா பெரியையா முன்னின்று அவர் நிகழ்த்தி வந்த அம்மனின் பங்குனித் திங்கள் திருக்குளிர்த்தியை வயதின் காரணமாக தன்னால் இயலாதபோது திருக்குளிர்த் தியைத் தொடர்ந்து நிகழ்த்துமாறு அரியாலை வளர்ந்தாளர் களிடம் ஒப்படைத்த வரலாறு அடியேன் நன்கறிந்தது.

அவருடைய விசுவாசத்திற்கேற்ப ஆண்டுதோறும் திருக்குளிர்த்தியைச் சிறப்புற நிகழ்த்தி வந்தவர்களுள் அமரர் பஞ்சலிங்கம் குறிப்பிடத்தக்க ஒருவர்.

**வை. காசிப்பிள்ளை மாணிக்கவாசகர்**

நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதருள் மாணிக்கம் போன்ற ஆசிரிய திலக செயல்வீரனை இழந்தோம்.

மனிதர் பிறப்பதும், வாழ்வதும், இறப்பதும், இயற்கையாக இறைவனால் நடாத்தப்படுகின்றது. பிறந்தவர்களுள், வாழ்வாங்கு வாழ்ந்து மனிதர்களினால் போற்றப்பட்டு புகழோடு வாழ்வோர் சிலர். இப்படியான சில மனிதருள் முன்னணியில் வைத்து எண்ணக்கூடிய சிறந்த தன்மையை அடைந்தவர்தான் அமரர் தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கம் ஆகிய ஆசிரிய ஜோதி ஆவார்.

எப்போதும் இனிமையான பேச்சு, எடுப்பான தோற்றம், புன்முறுவல் பூத்த முகம், லஷ்மீகரம் பொருந்திய அன்புப் பார்வை, வருகின்ற விருந்தினரை, சுற்றத்தவர்களை, தொழிலாளர்களை, ஆசிரியர்களை இனிமையாக வரவேற்று உபசரித்துப் பழகும் பண்பு, இவை எல்லாம் பொருந்திய ஓர் உத்தம ஆசிரிய ஜோதியை இழந்துவிட்டோம்.

கல்வி மேம்பாட்டுக்காகவும் ஆசிரியர்களின் பிரச்சினை களைத் தீர்க்கவும் அயராது உழைத்துப் பாடுபட்டவர். ஒரு சிறந்த உத்தம தொழிற்சங்க வாதியாக இருந்து செயற்பட்டதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

தனக்குக்கிடைத்த யாழ்ப்பாணக் கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவியை ஏற்று பெருமையடையாது திறம்படப் பணிபுரிந்து செயலாற்றியவர்.

இவர் தன் வாழ்நாளில் கடினமான உழைப்பாளியாக நல்ல பணிகட்காக உழைத்து வந்தார். ஒரு சிறந்த கலைஞராக, சமயவாதியாக, சமூக சேவையாளராக, கல்வியாளராக அவர் ஆற்றிய பணி அளவிட முடியாது. அரியாலை நாடக மன்றத்துடன் இணைந்து நடிகர்திலகம் சண்முகலிங்கத்துடன் சேர்ந்து பல நாடகங்களை நடித்து பேரும் புகழும் பெற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் எல்லாருடைய குடும்ப நன்மைகளுக்காக அயராது உழைத்தவர். நெருக்கடியான காலகட்டங்களில் எமது குடும்பத்தைச் சேர்ந்த சகல பிள்ளைகளையும் வெளிநாடு அனுப்ப கொழும்பு கூட்டிச் சென்று அனுப்பி வைத்ததை என்னால் மறக்க முடியாமல் இருக்கின்றது. சந்தனக்கட்டை தேய்ந்து தேய்ந்து வாசம் கொடுப்பது போல் மற்றவர்களுக்காக சேவை செய்யத் தன்னையே அர்ப்பணித்த பெருந்தகையாவார்.

இவர் தன் ஆசிரிய சேவையை முதன்முதலாக பண்டார வளை தோமஸ் கல்லூரியில் ஆற்றுகின்றபோது தன் குடும்பத்தை கவனிக்குமாறும், மூத்த சகோதரிக்கு திருமண ஒழுங்கு பார்க்கு மாறும் அடிக்கடி கடிதம் போடுவார். அது இப்போதும் என்னிடம் உண்டு.

எங்கள் உறவுகட்கிடையில் கருத்து வேறுபாடு வந்தாலும் எல்லோரையும் சமாளித்து நடந்த பெரும் பண்பு கொண்டவரை நாங்கள் இழந்து கண்ணீர்க்கடலில் மூழ்கித் தத்தளிக்கின்றோம்.

என்னைச் சின்னக்குஞ்சி என்று அன்புடன் அழைப்பார். நான் தூக்கி வளர்த்த எங்கள் ஆசைப் பஞ்சலிங்கத்தை இறுதி நிலையில் பார்க்கக் கொடுத்து வைக்காமையை இட்டு நானும் எனது மனைவியும் வேதனைப்படுகின்றோம். ஆண்டவன் விதிப்படி அவரின் வாழ்வு முடிவடைந்து விட்டது.

அவரின் ஆத்மா சாந்தியடைய சித்திவிநாயகனை, சிவனை, அம்பாளை, முருகனை, நாராயணனை, வைரவரை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

அன்னாரை இழந்து தவிக்கும் அவரது மனைவி பிள்ளைகட்கும் ஆறுதல் கூறுகின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**சின்னக்குஞ்சி**
**திரு. வ. நடராசா**
இளைப்பாறிய ஆசிரியர்,
சிவகீத அடியார்,
இந்து சமயத் தொண்டர்,
1ந் தர பயிற்றப்பட்ட விசேட பயிற்சி ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ANNAS DEATH A BIG BLOW TO THE TAMIL NATION

With deep sorrow and regret we received the news of the death of our elder brother (Anna), Thambipillai Panchalingam.

The news about Anna has shattered our hearts. People are devastated. Everyone I' ve talked to can't believe it. We' ve lost a person who' s put in so much to the Tamil Community. "We' re all heartbroken. He was an amazing man," said my mother Tharmalingam Thangamma, who is his aunt.

His blessed soul must have gone up to the garden of God. His life was full of great achievements and much unselfish giving to his beloved people.

My family and I had great respect and appreciation for Anna. He was an example whose decency, life, work, and conduct we all should emulate.

What a beautiful soul Anna had and how we will miss him.

He was so energetic and effective. We' ll never know why God called him at the prime of his life.

We will miss the strength and confidence he brought to the community; it won' t be the same without him. He was always willing to help and advise. He was always speaking up for his people.

This was the way he lived and this was the way he died.

Anna had an outstanding spirit; He occupied a distinguished position in the leadership of the Jaffna Education Department, where he was the Assistant Director of Education.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

He was also the senior Assistant Secretary for the Sri Lankan Tamil Teachers Association.

Anna touched the lives of students, teachers and staff across the Jaffna school district. His vision to bring change in our society through education, his determination to upgrade higher education standards in every part of Sri Lanka, and his very encouraging, mild and friendly disposition are matchless and irreplaceable.

The Sri Lankan Tamil Teachers Association and Jaffna Education Department were certainly, making commendable progress under his leader ship, As a member in our community, we had learnt so much from him, and still need to remember the practical lessons he has taught us through his commitment and hard work!

We share your pain with your great loss, and also offer our heartfelt condolences and our sincere brotherly support.

He has left a hole in our hearts that we will never be able to fill.

His death is a big loss to his family, to the community, and to the entire Tamil Nation.

**Tharmalingam Langeswaran,**
*CGA ( Canada), B.Com (Hons).*
*Income Tax / GST Tax Auditor,*
*Underground Economy*
*Canada Revenue Agency ( Government of Canada)*
*257 Queen Mary Drive, Brampton. Ontario, L 7A 3L6*
*Home 905- 4952395 Bus: 416- 4105490*
*Email: langeswaran @ rogers. com*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் இதயதீபமே!
# சொல்லாமல் எங்கே போனீர்கள் ?

வல்லிபுர சிம்மாசனத்தில் முதல் உதித்த உதய சூரியனே
பல்லாண்டுகள் நீங்கள் வாழுவீர்கள் என்று கங்கணம் கட்டினோமே
சில்லென்று வந்த உங்கள் திடீர் மறைவுச் செய்தி கேட்டு
அல்லோலகல்லோலம் கொண்டதோ உறவுப் பாலங்கள் இங்கே
வில்லுக்கு அர்ச்சுனன்போல் சொல்லுக்கு நீங்களன்றோ
மல்லுக்கு வந்த காளை போல் வீரமுடன் உலாவி வந்தீர்களே
கல்லும் உருகி விட்டதண்ணா உங்களின் திடீர் மறைவால்
சொல்லும் வருகுதில்லை உங்களைப் பற்றி நாம் எழுதுவதற்கு
நல்லார் வாழார் என்பதை நன்கு உணர்ந்தும் விட்டோம் இப்போது
செல்லமாக ராசா என்று அழைப்பதற்கு யார்தான் இனி உள்ளாரோ
நெல்லுக்கு இறைத்த நீர் போல பலரும் உங்களால் பயனும் கண்டனரே
அல்லும் பகலும் திரிந்து செய்த பொதுத் தொண்டுகள் தான் எத்தனை
வல்லவராய் நாம் வாழ ஆக்கமும் ஊக்கமும் தந்ததை மறந்துவிடலாமா?
முல்லைக்கு ஈந்த பாரியாய் உதவிகளை வாரிவாரி அளித்தீர்களே
செல்வத்தின் உயர் செல்வமாக மூன்று முத்துக்களைப் பெற்று
இல்லாளையும் குலதெய்வம் போல் மனதில் அனுசரித்து வந்தீர்களே
கல்விச் சமூகத்தின் மனதில் கடவுளாக பள்ளி கொண்டதை
எல்லோரும் தெரிந்து கொண்டோம் உங்களின் இறுதி
மரியாதையில்சொல்லாமல் எங்கேதான் போனீர்களே எம் இதய தீபமே!

*த. தியாகலிங்கம்*
*உடன் பிறந்த சகோதரன்*
*அரியாலை மக்கள் சார்பாக*
*நோர்வே வாழ் உறவுகள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சு பொறுக்குதில்லை
# உம் பிரிவைத் தாங்கிடவே

காலை வேளையிலே
கலைமகள் வீதியாலே
கால் நடையில் செல்கையிலே
காத்திருந்து ஒருவர்
காலன் கவர்ந்த செய்தி - அவன்
காதினிலே உரைத்திட்டான்.

தம்பிப்பிள்ளை பெற்றெடுத்த புத்திரனார் - எமை
தேம்பியழ வைத்துவிட்டு சென்று விட்டார்.

கல்விக் கூடத்தின் அதிகாரி யவர்
கலைகள் பலவற்றில் வல்லவரவர்
ஊழியர் சங்கத்தின் செயலாளரவர்
உறவினர் எமக்கெல்லாம் உற்ற நண்பரவர்.

பாலும் பருகவில்லை
பட்டினியாய் கிடந்ததில்லை
பாய்போட்டுப் படுக்கவில்லை
படுத்துறங்கும் வேளையிலே
பாழாய்ப்போன காலனவன்
பறித்தெடுத்தான் அவ்வுயிரை.

'அண்ணா' என்றழைக்க
அந்நிய தேசத்தில் ஆயிரம்பேர்
'அத்தான்' என்றென்னை
அன்புடனே அழைத்திடுவார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பஞ்சு' என்றழைக்க
பழகியவர் ஏராளம்
நெஞ்சு பொறுக்குதில்லை
உன்பிரிவைத் தாங்கிடவே.

ஊர் வந்த போதும்
உங்களை நான் காணவில்லை
தேரோடும் வீதியில் நான்
தேடி வந்தேன் காணவில்லை
பார்போற்றும் வகையில் உங்கள்
பரிதவிக்கும் பயணம்
பேர் சொல்லும் வகையில்
பேசியதை நான் கேட்டேன்

பூதவுடல் மறைந்தாலும் - உம்
புகழுடல் மறையவில்லை
பாதமலர் செலுத்தி நாம்
பண்ணுகின்ற அர்ச்சனையால்
சாந்தி பெறும் உம் ஆத்மா
சத்தியமாய்ச் சொல்லுகின்றேன்.

*மைத்துனர்*

V.T. *ராஜேந்திரா*

**தன்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது.**

**மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்எனுஞ் சொல்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணம் உன்னிடம் மன்னிப்பு கேட்கும்

எங்கள் மூத்த மைத்துனா!
எங்கள் கூட்டுக் குடும்பத்தின் உயிர் மூச்சு.
திடீர் என ஏன் உறைந்து விட்டாய்?
காலனே! ஏன் இந்த அவசரம்!! - நான்
கொழும்பிலிருந்து வந்தவுடன்
என்னை முதலில் சுகம் கேட்பவரும் - நீயே
என்றும் புன்னகை மலர்ந்த உன்முகமும்
சாந்தமான உன் பேச்சும்
இன்றும் என் மனதில் ஓயாத அலைகளே!
“அடே அருண்” “அடே அருண்” என்று
என் மகனை நீ செல்லமாக அழைப்பது
இன்றும் என் காதில் எதிரொலிக்கிறது
எமது அயலில் நடக்கும் நன்மை, தீமை
எல்லாவற்றையும் நீ பார்ப்பாய் என்று
நிம்மதியாக இங்கு இருந்தோமே
இனி உன் துணையை நாம் எங்கே தேடுவோம்
காலனே ஏன் இந்த அவசரம்!!
கேட்ட போதெல்லாம் ஓடி வந்து உதவி செய்வீரே
எங்களை நல்வழி காட்டினீர்களே
திடீரென ஒளி அணைந்து விட்டது
கார் இருளில் கதிகலங்கி நிற்கின்றோம்
ஆனால் ஒன்று மட்டும் நிஜம்
'ஒரு நாள் மரணத்திற்கு மனச்சாட்சி வந்தால்
உன்னிடம் மட்டும் வந்து மன்னிப்பு கேட்கும்'

உன் பிரிவால்
துயருறும் மைத்துனன்
**த. இரகுநாதன்**
(கொழும்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாரையெனி அத்தான் என அழைப்பேன்

அரியாலையூர் தந்த அன்புத் திலகமாய் - எங்கள்
அக்காவை துணையாக்கி அத்தானாய் துணைநின்றாய்
அகலக் கரம் நீட்டி அணைத்தாயே எமையெல்லாம்
அக்கரம் நழுவியதால் அலைகடலில் துரும்பானோம்
அத்தான் என உனை அழைக்க அரும்பேறு பெற்றவர் நாம்
அன்போடு நீர் அழைத்தவொலி என் காதோரம் கேட்கிறதே
ஆழ்கடலில் தத்தளிப்பாய் ஆடுகின்ற மனிதருக்கு
ஆவன செய்துதவ ஆண்டவன் போல் நீயிருந்தாய்
ஆயிரம்பேர் வந்திங்கு ஆறுதல் சொல்லிடினும்
ஆறாது இத்துயரம் என் ஆருயிர் அத்தானே

இங்கு எம்மை தவிக்கவிட்டு இறைவனிடம் சென்றாயோ
இன்னமும் ஆறவில்லை என் இதயத்தின் துடிப்பன்றோ
இறைவனுக்கு இதுவெல்லாம் இடைவேளை விளையாட்டு
இருப்பவர் எம்மவர்க்கு இது பெரும் இடியென்றோ
ஈரமற்ற நெஞ்சோடு ஈட்டி கொண்டு வந்திங்கு

ஈவிரக்கம் இன்றி உன்னுயிரை ஈர்ந்தெடுத்து சென்றானே
உற்றாரும் மற்றோரும் உறங்கியிருந்த வேளைதனில்
உனதுயிரைப் பறித்து எம்மை உளறவிட்டுச் சென்றானே
உந்தன் நினைவுதான் எப்பொழுதும் உருவமாய்த் தெரியுதத்தான்
உன்னை விட்டு யாரை எனி இவ்வுலகில் அத்தான் என அழைப்பேன்

அன்பு மைத்துனன்
சக்திவேல்
(கனடா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியப்பா எனும் ஆலமரம் சாய்ந்தது.

அன்று அதிகாலை தொலைபேசியில் அறிந்த
பெரியப்பா எனும் ஆலமரம் சாய்ந்த செய்தி
பேரிடியாக என்னைக் கதிகலங்க வைத்ததுவே

சில காலம் சேர்ந்திருந்தும் நிலைத்திருந்த பாசவலை
காலனின் சதியால் சொல்லாமல் அறுந்த தென்ன
இனி எப்போ காண்போம் உமது சிரித்த முகம்

வாசலில் கண்டதும் "பபி" சுகமா என்று
வாஞ்சையுடன் கேட்கும் அந்த நாளும் இனி வந்திடுமோ
பெரியப்பா என்ற பாசத்துடன் நானும் இனி
யாரைத்தான் அழைத்திடுவேனோ

பா. தர்சிகா (பபி)
கொழும்பு

தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்வளையம் சாத்தி அஞ்சலி செலுத்தியோர் விபரம்

1. யா / நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை
2. A.P.D.E & Staff School Work Unit
3. முஹம்மதிய்யா ஜும்மாப்பள்ளி - யாழ்ப்பாணம்.
4. யா / சென் சாள்ஸ் மகா வித்தியாலயம்
5. கோப்பாய்க் கோட்டம்
6. Zonal Education Office - Jaffna
7. யா / இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை
8. யா / சென் ஜோன்ஸ் கல்லூரி - பழைய மாணவர் சங்கம்
9. கோப்பாய் ஆசிரியர் கலாசாலைச் சமூகம்
10. யா / அச்சுவேலி மத்திய கல்லூரி
11. யாழ் கல்விக் கோட்டம்
12. I.O.M Staff - Jaffna
13. யாழ் / பிரதேச முன்பள்ளி ஆசிரியர் சங்கம்
14. வடமாகாண அதிபர்கள் சங்கம்
15. ஆசிரியர் கழகம் கொக்குவில் இந்துக் கல்லூரி
16. யா/வைத்தீஸ்வரக் கல்லூரி
17. இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்
18. UP - VI A+B
19. திரு. திருமதி தவராசா குடும்பம், சிவகுமரன் குடும்பம் - இலண்டன்
20. தியாகலிங்கம் குடும்பம், சோதிலிங்கம் குடும்பம், குணதாசன் குடும்பம் (நோர்வே), மகாலிங்கம் குடும்பம் (கனடா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னாரின் இறுதிக் கிரியையின் போது கண்ணீர் அஞ்சலி துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டோர் விபரம்

1. சயன்ஸ் அக்கடமி - அரியாலை, நல்லூர்
2. காமாட்சியம்பாள் முன்பள்ளி - நீர்வேலி
3. க. இரகுநாதன் குடும்பம் - அரியாலை
4. முன்பள்ளி ஆசிரியர் சங்கம் - நல்லூர்
5. இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் - யாழ்ப்பாணம்
6. ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம் - அரியாலை
7. யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்
8. வலி.கிழக்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கம் - புத்தூர்
9. கலாபூஷணம் வே.சிதம்பரநாதன் குடும்பத்தினர்
10. அரியாலை 89 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா நிர்வாகம் (2008)
11. செல்லையா கோபாலகிருஸ்ணன், நாகலிங்கம் கோபால கிருஸ்ணன் - சங்கானை
12. ஜோதி கலாமன்றம் - அரியாலை
13. அரியாலையூர் நண்பர்கள்
14. வலயக் கல்விப் பணிப்பாளரும் சக உத்தியோகத்தர்களும் - யாழ்ப்பாணம்
15. அருணோதயா சனசமூக நிலையம் - அரியாலை
16. நிர்வாகம்- அரியாலை அபிவிருத்திச் சங்கம்
17. நிர்வாகம்- அரியாலை சனசமூக நிலையம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரரின் இல்லத்தில் நடைபெற்ற அஞ்சலி உரைகளிலிருந்து....

* **தலைமை:- திரு. S.T பத்மநாதன் (J.P) அவர்கள்**

  *தலைவர், அரியாலை அபிவிருத்திச் சங்கம்*
  *"அரியாலையூரின் சகலதுறை வளர்ச்சியிலும் அதிக அக்கறை கொண்டு செயலாற்றிய பண்பாளன்"*

* **திரு. ப. விக்னேஸ்வரன் அவர்கள்**

  *வலயக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்*
  *"முரண்பாடுகளைத்தீர்த்து நட்புறவோடு பங்காற்றிய நல்ல பணியாளன்"*

* **திருமதி. அருளேஸ்வரி வேதநாயகம்**

  *வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணக் கல்வி வலயம்*
  *"முன்பள்ளிகளுக்கூடாக புதியதொரு சமூகத்தைப் பார்க்க நினைத்த நல்ல சிந்தனையாளன்"*

* **திரு. த. மகாசிவம் அவர்கள்**

  *பொதுச் செயலாளர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் செயற்றிட்ட இணைப்பாளர், நிக்கொட் திருகோணமலை.*
  *"இலங்கையில் வாழும் ஒவ்வொரு தமிழ் ஆசிரியருக்காகவும் தன்னை ஆகுதியாக்கிய சிறப்பான தொழிற்சங்க ஊழியன்"*

* **திரு. V. K கணபதிப்பிள்ளை அவர்கள்**

  *சிரேஷ்ட விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.*
  *"ஆசிரியர்களின் வாண்மை விருத்தியின் வளர்ச்சிப் படிகளை உன்னிப்பாக அவதானித்து கோப்பாய் ஆசிரிய கலாசாலை யோடு நல்ல உறவைப் பேணிய சிறந்த மனிதர்"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* **திரு. அ. பரமநாதன் அவர்கள்**

யாழ் மாவட்ட அரச சார்பற்ற பொது அமைப்புக்கள் சார்பாக "ஒட்டு மொத்த மக்களினதும் வாழ்க்கைப் படிமுறைகளில் அதிக அக்கறை கொண்டு அயராது தொழிற்பட்ட நல்ல மனிதர்"

* **திரு. K. அருணகிரிநாதன் அவர்கள்**

தலைவர், இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம், தீவகம்
"சங்கத்திற்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்து பிறர்க்காக வாழ்ந்த தொழிற்சங்க வாதி"

* **திரு. V. யோகநாதன் அவர்கள்**

பீடாதிபதி, யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி
"கல்விச் சமூகத்திற்காக தன்னை அர்ப்பணித்த நல்ல கல்வியாளர்"

* **லயன் V. மாணிக்கம் அவர்கள்**

அதிபர், யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்
"எமது பாடசாலையின் கௌரவத்திற்குரிய மனிதன்"

* **திரு. இ.சங்கர் அவர்கள்**

முகாமைத்துவப் பணிப்பாளர், பாரதி பதிப்பகம்,
யாழ்ப்பாணம்.
"நல்ல சிந்தனையுள்ள நண்பனை நாம் இழந்துவிட்டோம்"

* **திரு. ச. உருத்திரேஸ்வரன் அவர்கள்**

உதவிப் பணிப்பாளர், விவசாயத்திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
"நாடகக் கலையுலகில் தனக்கென தனி முத்திரை பதித்து ஏகோபித்த பாராட்டைப் பெற்ற சிறந்த நடிகன்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* **திரு. S.C செல்வராசா அவர்கள்**

அரியாலை சனசமூக நிலையம்

"அரியாலையூரின் சகலதுறைகளிலும் தன்னை இணைத்து நல்ல ஆலோசகராக விளங்கிய சமூக சேவையாளன்"

* **திரு.கு. தனபாலசிங்கம்**

தலைவர்,அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாச்சபை - 2008

"நாடகத்துறை மூலம் அரியாலையின் கலை வளர்ச்சிக்காக அரும் பணியாற்றிய சமூகப் பண்பாளன்"

* **திரு. இ. மதிகரன் அவர்கள்**

தலைவர், அரியாலை கலைமகள் சனசமூக நிலையம்.

"அயலவர்களை மதிக்கத் தெரிந்த நல்ல பண்பானவர்"

* **திரு. சி. சிவதாசன் அவர்கள்**

செயலாளர், இலங்கை கலை இலக்கியப் பேரவை.

"கலைத்துறையில் சகல பாகங்களையும் வெளிப்படுத்தக் கூடிய சிறந்த கலைஞன்"

* **திரு. S. உதயகுமார் அவர்கள்**

இணைப்பாளர், I.O.M யாழ்ப்பாணம்.

"அரச சார்பற்ற நிறுவனங்களுக்கூடாக குடாநாட்டு மக்களின் துயர் நீக்கப் பாடுபட்ட நல்ல சமூக சேவையாளர்"

[redacted]:
[redacted]
([redacted] - [redacted].)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரரின் புகழுடல் அஞ்சலிக்காக யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் வைக்கப்பட்டிருந்தவேளை நடைபெற்ற அஞ்சலி உரைகளிலிருந்து.....

1. **தலைமையுரை:**
   திரு. இ. நாகராஜா அவர்கள்
   பிரதம நிர்வாக உத்தியோகத்தர், யாழ் கல்வி வலயம்.
   "நல்ல நண்பராக எல்லோரிடத்தும் அன்பு கொண்டு நடந்த நல்ல மனமுள்ள பண்பாளர் அமரர் பஞ்சலிங்கம்."

2. **செல்வி T. பெரியதம்பி அவர்கள்**
   முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடகிழக்கு மாகாணம்
   "நல்ல சகோதர உணர்வோடு எதையும் மனம்விட்டுப் பேசும் சிறந்த மனிதனாக வாழ்ந்தவர் அமரர் பஞ்சலிங்கம்."

3. **திரு. V. T. செல்வரெத்தினம் அவர்கள்**
   மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், யாழ் மாவட்டம்
   "நல்ல உத்தியோகத்தராக, நல்ல பண்புகொண்ட மனிதனாக எனது காலத்தில் சிறப்பாகக் கடமையாற்றியவர் அமரர் பஞ்சலிங்கம்."

4. **திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்கள்**
   "பிஞ்சுக் குழந்தைகளின் அடித்தளம் சரியாக அமைய வேண்டுமென்பதில் அக்கறை கொண்டுழைத்த உதவிக் கல்விப்பணிப்பாளர் அமரர் பஞ்சலிங்கம்."

5. திரு. வ. இராதாகிருஸ்ணன் அவர்கள்
   பிரதிக்கல்விப் பணிப்பாளர், தீவகக் கல்வி வலயம்
   "பல்வேறு செயற்றிட்டங்களுக்கூடாகத் தீவக மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் கணிசமான பங்கெடுத்தவர்"

6. **திரு. S. இரகுநாதன் அவர்கள்**
   கோட்டக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி
   "அனைத்துப் பிரதேச கல்வி அபிவிருத்தியையும் சமமாகக் கருதி செயலாற்றிய நல்ல மனிதர்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. **திரு. T. அருணகிரிராஜா அவர்கள்**

பிரதிக்கல்விப் பணிப்பாளர், (திட்டமிடல்) யாழ் கல்வி வலயம்
"நீண்ட காலத் தோழமையுள்ள தலைமைக்கு விசுவாசமான நல்ல நண்பன் பஞ்சலிங்கம்."

8. **திரு. V. குணசேகரம் அவர்கள்**

கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
"சமூக நற்சிந்தனையுள்ள நல்ல நண்பனையும், சிறந்த வழிகாட்டியையும் இழந்துவிட்டோம்."

9. **பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள்**

"பாடசாலைக் கல்வி வளர்ச்சியில் மட்டும் அக்கறை கொள்ளாது பல்கலைக்கழக கல்வியிலும் தனது அக்கறையைச் செலுத்திய பண்பாளர் பஞ்சலிங்கம்."

10. **செல்வி P. உமா அவர்கள்**

செயற்றிட்ட இணைப்பாளர், சிறுவர் பாதுகாப்பு நிதியம்
"கல்வித்துறைசார் வளர்ச்சிக்காக பல்வேறு அமைப்புக்களை ஒருங்கிணைத்துச் செயற்பட்ட நல்ல அதிகாரி அமரர் பஞ்சலிங்கம் அவர்கள்"

11. **திரு. T. இராஜலிங்கம் அவர்கள்**

பிரதிக்கல்விப் பணிப்பாளர், யாழ் கல்வி வலயம்
"சங்கப்பணி, திணைக்களப்பணிகளோடு மட்டுமல்லாது இடர்கால ஜீவனோபாயப்பணிகளிலும் முன்னின்று பல்வேறு உதவிகளைப் புரிந்த நல்ல காருண்ணியப் பண்புள்ள மனிதர் அமரர் பஞ்சலிங்கம் அவர்கள்.

12. **திரு. K. குமாரசாமி அவர்கள்**

உதவிக் கல்விப் பணிப்பாளர், யாழ் கல்வி வலயம், செயலாளர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், யாழ் மாவட்டம்
"நண்பனாக, தொழிற்சங்க வழிகாட்டியாக, சாந்த குணமுள்ளவராக, எவ்வேளையும் கைகொடுக்கும் பண்பாளனாக விளங்கியவர் அமரர் பஞ்சலிங்கம் அவர்கள்"

13. **திரு. K. குலசேகரம் அவர்கள்**

ஆசிரிய ஆலோசகர், யாழ் கல்வி வலயம்
"திணைக்களத்தில் கூடிக் கடமையாற்றிய உற்ற நல்ல நண்பனை இழந்துவிட்டோம்"

[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகை மூலம் இரங்கல் செய்திகளை வெளியிட்டோர்

வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

பாரதி பதிப்பகம் - யாழ்ப்பாணம்

கோப்பாய் ஆசிரிய கலாசாலை - கோப்பாய்

யா / அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை

மாவட்ட கடற் தொழிலாளர் சம்மேளனம் - யாழ்ப்பாணம்

கோட்டக் கல்வி அலுவலகம் - நல்லூர்

யாழ் / இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

89 ஆவது ஆண்டு சுதேசிய திருநாள் விழா நிர்வாகம் (2008)

அரியாலை ஐக்கிய கழகம்

அரியாலை அபிவிருத்திச் சங்கம்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் - யாழ்ப்பாணம்

பாலர் கல்விக் கழகம் - யாழ்ப்பாணம்

வலி.கிழக்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கம் - புத்தூர்

ஆசிரியர் சங்கம் - வலிமேற்கு சித்தங்கேணி

யா / நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை

கோட்ட முன்பள்ளி ஆசிரியர் சங்கம் - யாழ்ப்பாணம்

வலயக் கல்வி அலுவலகம் - வடமராட்சி

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் - தென்மராட்சிக் கிளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மாவட்ட தொலைபேசி இலக்கங்கள்

## சில பாடசாலைகள்

| | |
|---|---|
| சென்ஜோண்ஸ் கல்லூரி | - 021 - 222 2432 |
| மத்திய கல்லூரி | - 021 - 222 2184 |
| வேம்படி மகளிர் கல்லூரி | - 021 - 222 2187 |
| யாழ் இந்துக் கல்லூரி | - 021 - 222 2431 |
| யாழ் இந்து மகளிர் கல்லூரி | - 021 - 222 2346 |
| திருக்குடும்ப கன்னியர் மடம் | - 021 - 222 2455 |
| புனித ஜோண் பொஸ்கோ | - 021 - 222 2540 |
| இந்து ஆரம்ப பாடசாலை | - 021 - 222 2119 |
| இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை | - 021 - 222 7930 |
| பெரியபுலம் மகா வித்தியாலயம் | - 021 - 222 3446 |
| கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் | - 021 - 222 3456 |
| வைத்தீஸ்வரக் கல்லூரி | - 021 - 222 3322 |
| கொக்குவில் இந்துக் கல்லூரி | - 021 - 222 2645 |
| கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை | - 021 - 222 4590080 |
| கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம் | - 222 - 6230 |
| சென் சாள்ஸ் மகா வித்தியாலயம் | - 021 - 222 9037 |
| வண்ணை நாவலர் வித்தியாலயம் | - 021 - 222 6997 |
| சுண்டுக்குளி மகளிர் கல்லூரி | - 021 - 222 2338 |
| சென் பற்றிக்ஸ் கல்லூரி | - 021 - 222 2388 |
| சென் ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை | - 021 - 222 3422 |
| சென் ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை | - 021 - 222 6947 |
| ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் பாடசாலை | - 021 - 222 6564 |
| சென். பெனடிக் றோ. க. த. க பாடசாலை | - 021 - 4590662 |
| கோப்பாய் மகா வித்தியாலயம் | - 021 - 222 6535 |
| கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி | - 222 6840 |
| உரும்பிராய் இந்துக் கல்லூரி | - 222 3829 |
| உரும்பிராய் சைவப் பிரகாச வித்தியாலயம் | - 222 3811 |
| அத்தியார் இந்துக் கல்லூரி | - 060 2213357 |
| ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம் | - 060 - 221 3267 |
| புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி | - 602 - 221 2230 |
| அச்சுவேலி சென் தெரேசா வித்தியாலயம் | - 602 - 221 3197 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் | - 226 3017 |
| மானிப்பாய் இந்துக் கல்லூரி | - 222 2658 |
| மானிப்பாய் மெமோறியல் கல்லூரி | - 222 5221 |
| மானிப்பாய் மகளிர் கல்லூரி | - 222 2788 |
| உடுவில் மகளிர் கல்லூரி | - 222 3300 |
| வேலணை மத்திய மகா வித்தியாலயம் | - 4590836 |

## பொது நிறுவனங்கள்

| | |
|---|---|
| Raan | - 222 3694. 2135 |
| சர்வோதயம் | - 222 2351 |
| வர்த்தக சங்கம் | - 222 2367. 2828. 3257. 6390 |
| மனித நேயம் | - 222 3668 |
| மாநகரசபை | - 222 2335 |
| தொழில்நுட்பக்கல்லூரி | - 222 2358 |
| திறந்த பல்கலைக்கழகம் | - 222 2374 |
| உயர் தொழில்நுட்பக் கல்லூரி | - 222 2595 |
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | - 222 2294. 2483 |
| மின்சார சபை | - 222 2609 |
| மாவட்ட செயலகம் | - 222 2235. 2236 |
| யாழ். போதனா வைத்தியசாலை | - 222 2260. 2261 |
| நல்லூர் பிரதேச சபை | - 222 2208 |
| தேசிய கல்வியற் கல்லூரி | - 222 3584 |
| விவசாயத் திணைக்களம் | - 222 2396. 7105. 6834 |
| ரெலிக்கொம் | - 222 2231. 2232. 2211 |

## பத்திரிகைகள்

| | |
|---|---|
| உதயன் | - 222 9933. 9944. 3837 |
| சுடர்ஒளி (கொழும்பு) | - 0114734401 - 4 |
| தினக்குரல் | - 222 2127. 5867 |
| தினக்குரல் (கொழும்பு) | - 0112523216 |
| வீரகேசரி | - 222 2730 |
| வீரகேசரி (கொழும்பு) | - 011 2439985. 0112448205 |
| வலம்புரி | - 222 3378 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வித் திணைக்களங்கள்

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | - 222 2449 |
| வலிகாமம் | - 222 4047 |
| வடமராட்சி | - 226 3291 |
| தென்மராட்சி | - 222 7113 |
| தீவகம் | - 060221 2374 |


## அரச சார்பற்ற நிறுவனங்கள்

| | |
|---|---|
| SCSL | - 222 5078 |
| UNICEF | - 222 2276 |
| J.SAL | - 222 3699 |
| UNHIR | - 222 2005 |
| TRRO | - 222 2416 |
| FORUT | - 222 5954 |
| CARE | - 222 2428 |
| ICRC | - 222 2026 |
| SLRC | - 222 2561, 9792 |
| UNDP | - 222 2277 |
| IOM | - 222 7680 |
| GTZ | - 222 8123, 2635 |
| HUDEC | - 222 2571 |
| CHA | - 222 6655 |
| SOLIDAR | - 222 9871 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



எங்கள் குடும்பத் தலைவர் நோயுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தவேளை அவரது நோயைத் தீர்ப்பதற்காக அயராது உழைத்த வைத்தியக் கலாநிதிகளுக்கும், உதவி வைத்தியர்களுக்கும் , சக மருத்துவ உத்தியோகத்தவர்களுக்கும் எமது நன்றி.

03.04.2008 அன்னார் இறையடி சேர்ந்த வேளையில் உடன் வருகைதந்து எமது துயரத்தில் கலந்து உதவிகளைச் செய்துதந்த சுற்றத்தார், அயலவர்கள் மற்றும் கல்விச் சமூகத்தவர்களுக்கும்,

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நடைபெற்ற 06.04.2008 இல் பெருந்திரளாகக் கலந்து கொண்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும், இறுதிக் கிரியைக்கு முன்னரும், பின்னரும் நேரடியாக வருகைதந்து எமது துயரத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும்,

தொலைபேசி, மின்னஞ்சல், தொலைநகல், கடிதம், தந்தி மூலம் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இருந்து அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும்,

பத்திரிகைகளில் இரங்கல் செய்திகளை வெளியிட்டோருக்கும் இறுதிக் கிரியைத் தினத்தன்று இதய அஞ்சலி, துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டோருக்கும்,

மலர்வளையங்களை சாத்தியோருக்கும் ,

அமரர் இறந்த செய்தி மற்றும் அமரரின் இறுதி அஞ்சலி நிகழ்வுகளை பிரசுரித்த பத்திரிகை நிறுவனத்தினருக்கும்,

இல்லத்தில் அஞ்சலி உரை ஆற்றியோர்க்கும் ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னாரின் புகழுடலை இறுதி மரியாதைகளுடன் அணிவகுத்து கல்வி வலயத்திற்கு எடுத்துச்சென்ற மாணவர்கள், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினர், கல்விச் சமூகத்தினர், நண்பர்கள் அனைவருக்கும்,

இறுதி ஊர்வலத்தின்போது இலவசமாக வாகன சேவையை வழங்கிய ராஜீ வாகன சேவை உரிமையாளருக்கும், மற்றும் அஞ்சலி உரை நிகழ்வுகளை ஏற்பாடு செய்த யாழ் கல்வி வலயத்தினருக்கும்,

அங்கு உரை நிகழ்த்தியோருக்கும்,

இறுதிக் கிரியைகளின்போது கீர்த்தனைகளைப் பாடியோருக்கும்,

இன்று அன்னாரின் நினைவாக வெளிவரும் "**பஞ்சதீபம்**" நூலுக்கு இரங்கல் செய்திகள், பொதுவிடயங்கள் என்பவற்றை வழங்கி உதவியோருக்கும்,

மிகச் சிறப்பாக இம்மலரை வடிவமைத்துத்தந்த பாரதி பதிப்பகத்தினருக்கும், திரண்டிருக்கும் உங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

*40/2, கலைமகள் வீதி,*
*அரியாலை.*
*27.04.2008*

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பாரதி பதிப்பகம், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். T. P : 021 222 3081

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org